# பொ. கைலாசபதியும் பொருளாராய்ச்சியும்

ச. பரநிருபசிங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட வெளியீடு:

# போ. கைலாசபதியும் பொருளாராய்ச்சியும்

ச. பரநிருபசிங்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக்
கலைப்பீட வெளியீடு

பொ. கைலாசபதியும்
பொருளாராய்ச்சியும்

ச. பரநிருபசிங்கம்

முதற் பதிப்பு: 1994

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீட வெளியீடு

அச்சீடு: பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்

விலை: ரூபா 40/-

P. Kailasapathy and His Philosophy

*S. Paranirupasingham*

First Edition: 1994

A publication of the Faculty of Arts
University of Jaffna.

Printer : Bharathi Pathippakam, Jaffna

Price: 40/-

# முகவுரை

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் பன்முகப்பட்ட சிந்தனைகளுக்கு மூலம் எங்கிருந்தது? இவ்வினா உயர்கல்வி வட்டங்களில் எழுந்தபோது, அவருடன் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக உடன் பழகிய பொ. கைலாசபதியையே அனைவரும் சுட்டினார்கள். அவரைப்பற்றி அறிந்தவர்களுக்கு அழைப்பு விடுத்து, ஆனி, 1991 ல் மூவரைச் சந்தித்து, அன்னாரது மெய்யியற் சிந்தனைகளை கற்றோர் அறியச் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தினோம். ஒரு மூதறிஞர் 'பண்டிதமணியே விளங்கவில்லை எனக்கருதியவற்றை இருவருடனும் நெருங்கிப் பழகிய நான் எப்படித் துணிந்து ஆராய முடியும் என்று பயந்து, பண்டிதமணி முகந்து தந்தவற்றை மட்டுமே கருத்தூன்றிக் கற்றேன்'' என்றார்.

பொ. கைலாசபதியவர்களுடன் இறுதி நாள் வரை தொடர்புற்று, அவரது பிற்கால சிந்தனைகளைப் பதிவு செய்து வைத்திருந்தவர்களும், பண்டிதமணியின் பதிவேடுகளில் கண்ட பொ. கை. சிந்தனைகளை விடய அட்டவணைப்படுத்திய வரும், இரு தசாப்த சிந்தனைக் குவியல்களை வரன்முறைப் படுத்திய (systematisation) வருமாகிய அளவெட்டி ச. பரநிருபசிங்கம், பண்டிதமணியின் விருப்பப்படி பொ. கை. சிந்தனைகளைப் பற்றிய ஒரு சுருக்கக் கட்டுரை எழுதியிருந்தார் என அறிந்தோம். அவர் குருசீட முறையில் உபதேசிக்கப்படும் மறைபோதனைகளை (esoteric teachings) நவீன பல்கலைக்கழக ஆய்வு ரீதியில் பேசுவது பொருத்த மற்றது என மறுத்தார். எனினும் எமது வேணவாவை மறுக்க இயலாது சம்மதித்தார். 11-9-91- ல் நிகழ்த்தப்பட்ட பேச்சு கலைப்பீடத்தினால் தட்டச்சுப் பிரதி வடிவில் அறிஞரிடையே உலாவவிடப் பட்டது. பல்கலைக் கழகத்தின் பல்துறை சார்ந்த அறிஞர் குழாமும் வெளி அறிஞரும் அப்பேச்சை வரவேற்றனர்.

அதைத் தொடர்ந்து, பண்டிதமணி பொ. கை. அவர்களிடம் கேட்டு எழுதிய சிந்தனைகளைத் திரட்டிப் பாதுகாக்கும் பணி முற்றுப் பெறும் தறுவாயில் உள்ளது. அதனை ஆய்வதற்கு திறவுகோலாக உதவும் என்ற காரணத்தால் இவ்விரிவுரை இப்போது அச்சடித்து வெளியிடப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற மெய்யியலர் என மேலைத் தேசம் பாராட்டும் விற்கென்ஸ்ரைன் (Wittgenstein) பற்றிய சிறு நூலை எழுதிய கிறேலிங் அவரது சிந்தனைகள் சுருக்கி எழுதப்பட வேண்டும், பல இடங்களில் கூறியது கூறல் இருப்பதாலும், ஒரு சிந்தனையே பல்வேறு சமயத்தில் ஆழமும் தெளிவும் பெற்றிருப்பதாலும், அவற்றைத் தொகுத்தும் வகுத்தும் வழங்குவது படிப்போர்க்குப் பயன் தரும் என்று கருதுகிறார். பண்டிதமணி பதிந்து வைத்த பொ. கை. சிந்தனைகள்

31 கைப்பிரதிகளில் பரந்து கிடக்கின்றன. அவை பகுதி பகுதிகளாகவேனும் ஆராயப்படுவதற்கு வழிவகுக்கும் தர்ப்பணமாக – குவிவாடியாக – இந்நூல் பயன் படும் என நம்புகிறோம்.

இறுக்கமான உயர்கல்விசார் ஆய்வில் ஈடுபட்ட பல்கலைக் கழகத்தில் மறை போதனைகள், அநுபூதியிற் கண்ட காட்சிகள் பற்றிய ஆய்வுகளுக்கு இடமுண்டா என்ற குரல் சில மூலைகளிலிருந்து எழலாம். பொ. கைலாசபதி நடமாடும் கலைக் களஞ்சியம் எனச் சமகால யாழ்ப்பாணக் கல்விமான்களால் மதிக்கப்பட்டவர். கணித, தர்க்கவியல்களை நன்கு கற்ற விஞ்ஞான பட்டதாரியாகிய அவர் நூல்றி புலவரும் அநுபூதிமான்களும் ஏற்கும் வகையில் தம் சிந்தனைகளை வெளியிட்டார். பண்டி தமணி ''அகக்கண் வெளித்தவர்கள் மெய்ஞ்ஞான உண்மைகளை வெளிப்புக்கேற்ற வாறு நிருபணஞ் செய்ய வல்லவராவர்'' என்று ''அத்வைத சிந்தனை'' முடிவுரை யில் கூறிய வாசகம் இவரை மனத்துட் கொண்டே எழுதப்பட்டது போலும்.

மேற்படி ஐயக்குரல்களுக்குப் பதில்: வியன்னாப் பல்கலைக் கழகத்தில் பேரா சிரியர் ஒபர்ஹாமர் (Oberhammer) 1973 ல் ''திருவெளிப்பாடு: மானிடனின் ஆன்மீக யதார்த்தம்'' Revelation a Spiritual Reality of Man என்ற தலைப்பிலும், 1977 ல் ''அதீத அனுபவம், கதியடையும் அடிவானம் (Transcendental Experience, or the Horizon Where Salvation is Achieved) என்ற தலைப்பிலும் இரு கருத்தரங்கு களை நடத்தினார். எனவே, எமது பல்கலைக்கழகம் இந்த நூற்றாண்டின் தலை சிறந்த யாழ்ப்பாணச் சிந்தனையாளர் ஒருவரது மெய்ப்பொருளாராய்ச்சி பற்றி முனைவர்கள் நிறைந்த கல்விசார் உலகம் போற்றும் விதமாக ஆய்வுகளை வெளியிட முயற்சிகளை மேற்கொள்வது பொருத்தமானதே. பல்கலைக்கழக நிதிநெருக்கடி காரணமாக நாம் தயங்கிய போது, இவ்வெளியீட்டுச் செலவை ஏற்க முன்வந்த திருமதி மைத்ரேயி – சபாரத்தினம் – பிரேம்ராஜ் கலைப்பீடத்தின் நன்றிக்குரியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
29-01-1994

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கலைப்பீடாதிபதி

# போ. கைலாசபதியும் பொருளாராய்ச்சியும்

*அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்*
*அருள் நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்*
*எத்தனையும் அரியநீ எளியை யானாய்*
*எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்*
*பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்*
*பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே*
*இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ*
*எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே.*

— திருநாவுக்கரசு சுவாமிகள்
*( ஆறாம் திருமுறை:-309.8 )*

## I பொருளாராய்ச்சி

*தச நாதங்கள்*

மணி கடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளை பேரிகை யாழ்
தெணிந்தெழு நர்தங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க வொண்ணாதே.

என்பது திருமந்திரம் (606), திருமூலநாயனார் திருவாக்கு. இறைவனது திருவடிகளை முறைப்படி அன்போடு பணிந்தவர்களன்றி ஏனையோர் மேலே கூறிய தச நாதங்களையும் பார்க்க முடியாது என்பது தாற்பரியம். இத் தச நாதங்களையும் பார்த்தலென்றால் என்ன? எத்தனை எத்தனையோ ஆலயங்களிருக்கின்றனவே, எத்தனையோ பேர் தினந்தோறும் பத்தி சிரத்தையோடு வணங்குகின்றார்களே, தச நாதங்களையும் அல்லது இவற்றுள் ஒரு நாதத்தையேனும் பார்த்தவருண்டா? பார்த்தவர்களைப்பற்றி யாராவது கேள்விப்பட்டதுண்டா?

ஆம். இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் நம் தமிழீழ நாட்டிலே ஒருவர் வாழ்ந்தார். அவர் தசநாதங்களையும் பார்த்தார்[1] இல்லை; தன் காதிலே பத்து வித ஓசைகளையும் கேட்டார். எதுவித கருவிகளும் இல்லாத தனிமையிலே தசநாதங்களும் அவர் செவிகளிற் கேட்டன. இது அவருடைய கற்பனையன்று. இந்த அற்புதத்தை அவரால் நம்ப முடியவில்லை, இந்தச் சித்தியை வைத்துக் கொண்டு 'சுவாமி' காட்டக் கூடிய கல்வியறிவோ, தந்திரபுத்தியோ இல்லாதவர் அவர், பாவம், என்ன செய்வார்? தனக்குத் தெரிந்த ஒரு பெரியாரிடம் இந்த இரகசியத்தை வெளியிட்டார்.

*யார் அந்தப் பெரியார்?*

அப்பெரியார் சாமானியரல்லர். பழுத்த காந்திய வாதியாகிய திரு. ஹண்டி பேரின்பநாயகத்தை நோக்கி, If you want to know the Truth, first of all you must be an iconoclast' ('உண்மையை அறிய விரும்பினால் முதலில் நீர் ஒரு 'சிலை உடைப்போனாய் இருத்தல் வேண்டும்') என ஆங்கிலத்தில் அறிவுறுத்தியவர். திரு. பேரின்பநாயகம் அவர்கள் கிறிஸ்தவ மிஷனோடு முரணபட்ட ஒரு சுயசிந்தனையாளன் என்று போற்றப்பட்ட காலத்திலே (1930 இற்கு முன்பின்னாக) சில நண்பருடன் சேர்ந்து குறித்த பெரியாருடன் கடவுள் உண்டா? கடவுள் இல்லாமல் உலகம் நடைபெறாதா? என்பன போன்ற விஷயங்கள் பற்றித் தர்க்கிக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. தர்க்கத்தைப்பற்றி திரு. பேரின்பநாயகம் அவர்கள் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்களுக்கு 'எங்கள் வாயாலேயே கடவுள் இருக்கிறார்தான் என்று சொல்லுவித்து விட்டார்!' என்று கூறியிருக்கிறார். 'We were simply routed out' ('நாங்கள் மூலத்தோடு பெயர்க்கப்பட்டு விட்டோம்') கூட என்று இருந்த நண்பர் வேறு நண்பர்களுக்குச் சொன்னதாகக் கேள்வி.

அப்பெரியார் ஒரு அபூர்வ விவேகி. அதிமனிதன். மகாஞானி. அவரோடு நெருங்கிப்பழகிய சுமார் எட்டுப் பத்துப் பேருக்குத்தான் அந்தச் சங்கதி தெரியும். மற்றவர்களுக்கு அவர் சாதாரண மனிதன்தான். எவ்வகையிலும் தன்னைக் காட்டிக் கொள்ளாது அவர் சாதாரண வாழ்க்கையே வாழ்ந்து வந்தார். அவர் பெயர் இரத்தினசபாபதி. சொந்த ஊர் தெல்லிப்பளையைச் சேர்ந்த கொல்லன்கலட்டி. இளமையில் ஆசிரியராய் இருந்தவர். பிரமசாரியாயே வாழ்ந்தவர். 1930-34 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கீரிமலையிலுள்ள துறவிகளாச்சிரமத்தில் தங்கியிருந்தவர். அந்தக்காலத்திலேதான் திரு. பேரின்பநாயகம் அவருடன் சம்பாஷிக்கும் பாக்கியத்தைப் பெற்றார். அப்பொழுதுதான் ஒருநாள் திரு. வயிரவியார் தசநாதங்களும் தமக்குக் கேட்பது பற்றி இரத்தினசபாபதி உபாத்தியாரிடம் கூறினார். வயிரவியாரும் உபாத்தியாருடைய ஊரைச் சேர்ந்தவர். உபாத்தியாயர் சாதாரண ஆளல்ல என்று தெரிந்திருந்தபடியால் தமது அநுபவத்தை அவரிடம் கூறினார். 'அப்படி அநுபவம் இருக்கும்நேரத்தில் எனக்குச் சொல்லும்' என்று உபாத்தியாயர் சொல்லி வைத்தார். அவ்வாறே ஒருநாள் தசநாதங்களும் தனது செவியில் ஒலித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வயிரவியார் உபாத்தியாயருக்குச் சொன்னார். உடனே உபாத்தியாயர் தனது செவியை அவருடைய செவியுடன் ஒட்ட வைத்துக்கேட்டார். என்னே அற்புதம்! உபாத்தியாயருக்கும் தசநாதங்களின் ஒலி கேட்டது. இந்தக் கதையை எனக்குச் சொன்னவர் உபாத்தியாயருடன் பல்லாண்டுகள் நெருங்கிப்பழகியவரும், வயிரவியாரை நன்கு தெரிந்தவரும், எனது ஆசிரியருமாகிய திரு. ச. பொன்னம்பலம் ஆசிரியரேயாவர். வயிரவியாரை நான் கண்டிருக்கிறேன். இந்தக் கதையை அறிந்தபின் இந்த அநுபவத்தைப்

பற்றி வயிரவியாரிடம் கேட்டேன். 'ஒரு காலத்தில் சில சமயங்களில் அப்படி இருந்ததுதான்; இப்பொழுது அப்படி ஒன்றுமில்லை' என்று சொன்னார். இது நடந்தது 1966 ஆம் ஆண்டளவில். சில வருடங்களின் பின்னர் அவர் இறந்துவிட்டதாய் அறிந்தேன்.

திரு. இரத்தின சபாபதி உபாத்தியாயர் மதிப்புப்பெற்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஊரிலேயே வாழ்ந்த வயிரவியார் வேறு ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். படிப்பறிவற்றவர். அப்படியிருந்தும், 'இப்படி ஒரு நல்ல விருத்தி அந்த மனிதனுக்கு இருந்ததே' என்பதற்காக உபாத்தியாயர் அவரோடு மிக மரியாதையுடன் நடந்துகொள்வார். ஏதாவது நல்ல விஷயம் கேட்கலாமென்று வயிரவியார் இடையிடையே உபாத்தியாயரைச் சந்திப்பதுண்டு.

1934 தொடக்கம் தனது இறுதி ஆண்டாகிய 1945 வரை உபாத்தியாயர் அளவெட்டியில் சனசஞ்சாரம் மிகக்குறைந்த ஓரிடத்தில் ஒரு கொட்டிலில் வாழ்ந்து வந்தார். உபாத்தியாருக்கென்றே திரு. மு. சின்னப்பு ஆசிரியரால் அமைத்துக் கொடுக்கப்பட்டது அந்தக் கொட்டில் - (அவர் மறைந்த பின்னர் அக்கொட்டிலையே ஒரு சிறு வீடாய் மாற்றியமைத்து, அதிலே ஒரு பிரபல சோதிடராய் திரு. சின்னப்பு பிற் காலத்தில் விளங்கினார்). திரு. சின்னப்பு, திரு. பொன்னம்பலம், திரு. த. சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை உபாத்தியாயர்) ஆகியோர் தினமும் கொட்டிலுக்குப் போய் அவருக்குப் பணி விடைகள் செய்தும் அறிவுரைகளைக் கேட்டும் வந்தனர்.

திரு. இரத்தினசபாபதி உபாத்தியாயரின் அறிவின் ஆழத்திற்கு ஓர் உதாரணம்: சின்னப்பு உபாத்தியாயரும் அவருடைய நண்பனாகிய முத்தையா ஆசிரியரும் 1927 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து விட்டனர். ஒரு நாள் சின்னப்பு ஆசிரியர் முத்தையா ஆசிரியர் வீட்டுக்குச் சென்று பண்டித பரீட்சைக்குரிய புத்தகங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். இவர்களுடைய சம்பாஷணையை அப்பொழுது அங்கே கேட்டுக்கொண்டிருந்த திரு. இரத்தின சபாபதி உபாத்தியாயர், 'உந்தப்புத்தகங்கள் பரீட்சைக்கும், 'சேட்டிபிக்கற்' றுக்குமாகவல்லோ படிக்கிறது. தமிழனாகப் பிறந்தவன் அறிவுக்காக ஏதாவது படிக்கில் சிவஞானசித்தியாரையல்லவோ படிக்கவேணும்' என்று சொன்னார். அன்று தொடக்கம், அவர்கள் அவரிடம் 'சித்தியார்' படித்தார்கள், சித்தாந்தத்துக்கு அவர் கொடுத்த விளக்கங்கள் அற்புதமாயிருந்தன. திராவிட மாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான முனிவர் சித்தாந்தப்பிறழ்வாய் - சித்தாந்தத்துக்கு முரணாய் - உரைசெய்த இடங்களெவை என்பதைத் தெளிவாய் எடுத்துக் காட்டினார். சிவஞான முனிவரே சித்தாந்த வியாக்கியான கர்த்தா எனக் கேள்விப்பட்டிருந்தவர்களுக்கு உபாத்தியாருடைய விளக்கங்கள் புதுமையும், சிறப்பும், தெளிவும் பொருந்தியனவாயிருந்தன. உபாத்தியாயர் இளமைக் காலத்தில் சென்ற் பற்றிக்ஸ் கல்லூரியிலே படித்து கேம்பிறிட்ஜ் சீனியர் பரீட்சையில் விசேட சித்தியடைந்தவர். அவருடைய தமிழ் சமயக்கல்வியைப்பற்றி ஒருவருக்குந் தெரியாது. அவருக்கு அவற்றைப் படிப்பித்தவர் யாருமில்லை. முன் தவத்தால் அவருக்கு அவை லபித்திருந்தன போலும்.

*உபாத்தியாயருக்கு வாய்த்த மாணவன்*
*மாணவனுக்கு வாய்த்த உபாத்தியாயர்*

1916 ஆம் ஆண்டு இளைஞன் பொ. கைலாசபதி மல்லாகம் ஆங்கிலப் பாடசாலைக்குப் படிக்கப் போன பொழுது, அங்கே திரு. இரத்தின சபாபதி ஒரு ஆசிரி

யராயிருந்தார். விட்டகுறை தொட்டகுறை இருவரையும் சந்திக்க வைத்தது போலும். இரண்டாம் வருட வகுப்பில் (Second Year[2]) ஒரு பிரிவுக்கு இரத்தின சபாபதி உபாத்தியாயர் ஆசிரியராயிருந்தார். பக்கத்திலிருந்த மற்றொரு பிரிவில் இந்த மாணவன் சேர்க்கப்பட்டிருந்தான். இந்த மாணவன் ஒரு நாள் ஒருவருக்கும் பேசாமல் இரத்தினசபாபதி உபாத்தியாயருடைய வகுப்பிலே போய் இருந்துவிட்டார். அதிபரும் ஆசிரியர்களும் பார்த்துச் சிரித்துவிட்டு, ''அப்படியே இருக்கட்டும்'' என்று விட்டு விட்டார்கள். மாணவனுடைய திறமையைக் கண்ட உபாத்தியாயர் ''நேரமுள்ள வேளைகளில் வீட்டுக்கு வந்து படிக்கலாம்'' என்றார். அப்படியே நடந்தது. சில காலம் சென்றபின் ''நீர் படித்திருக்கிற கணிதம் 'மற்றிக்குலேஷனுக்குப்'[3] போதும். இனி மற்றப் பாடங்களைப் படித்துப் பரீட்சையை எடும்'' என்று உபாத்தியாயர் சொன்னார். அவர் அப்படியே படித்து 1921 இல் மற்றிக்குலேஷன் பரீட்சையில் முதற் பிரிவில் சித்தியடைந்தார். பின்னர் இடையிடையே இருவரும் சந்திப்பதுண்டு.

மெய்ப் பொருளாராய்ச்சிதான் திரு. இரத்தின சபாபதி உபாத்தியாயரின் வாழ்க்கை. அவர் வாழ்ந்த கொட்டில் மெய்ப்பொருளாராய்ச்சி நிலையமாகவே விளங்கியது. மெய்ப்பொருளாராய்ச்சியே வாழ்க்கையாயமைந்த இன்னொருவர் வாரந்தோறும் கொட்டிலுக்கு வந்து போவது வழக்கம். அவர் தான் முன்னர் மாணவனாயிருந்து, பின்னர் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை உப அதிபராய்த் திகழ்ந்த திரு. பொ. கைலாசபதி அவர்கள். சொந்த ஊர் அளவெட்டியே ஆயினும், உத்தியோகம் காரணமாய் அவர் திருநெல்வேலியிலேயே வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு சனி காலையும் கொக்குவில் ஸ்டேஷனில் 'ரயில்' ஏறி மல்லாகத்திலிறங்கி நடந்து, அளவெட்டியிலுள்ள கொட்டிலுக்கு வருவார். உபாத்தியாயரும் அவர் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். வந்த நேரம் தொடக்கம் தத்தம் ஆராய்ச்சிகள், அநுபவங்கள் பற்றிக் கலந்துரையாடுவர். வந்தவாறே சாயந்தரம் திரு. பொ. கைலாசபதி அவர்கள் மல்லாகம் சென்று வீடு சேர்வர். அவர் சென்றபின் அவருடைய சிந்தனைகள், அநுபவங்கள் பற்றி அங்கு செல்லும் மற்றவர்களுடன் உபாத்தியாயர் கலந்துரையாடுவர்.

1933-34 ஆம் ஆண்டளவில் பொ. கைலாசபதியின் மனநிலையில் சில மாற்றங்கள், புதிய சில அனுபவங்கள் காணப்பட்டன. 'இந்தக் காலத்திலே இவற்றைப் பற்றி யாருடன் பேசுவது' என்ற விசனத்தோடு கூடிய விசாரம் அவருக்கிருந்தது. அப்பொழுது ஒரு நாள் ஓர் அந்தியேட்டிக்குக் கீரிமலைக்குச் சென்றார். அங்கு நின்ற பொழுது உபாத்தியாயர் துறவிகளாச்சிரமத்திலிருக்கும் நினைவு வர, அவரைப் பார்ப்போமென்று சென்றார். அவருடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் பொழுது 'இவருடன் இதைப்பற்றிப் பேசலாம்' என்ற எண்ணம் வர, தன் அநுபவங்கள் பற்றிக் கதைத்தார். அன்று முதல் இடையிடையே அவரைச் சந்திப்பது வழக்கம். உபாத்தியாயர் அளவெட்டிக்கு வந்த பின் மேலே குறிப்பிட்டவாறு ஒவ்வொரு சனிக்கிழமையும் சந்திப்பது நியதியாகி விட்டது.

கைலாசபதி அவர்கள் உபாத்தியாயரைத் தமது வழிகாட்டியாயே மதித்து நடந்து வந்தார். ஆனால் உபாத்தியாயர் அவரை மிக உயர்ந்த ஒரு இடத்தில் வைத்திருந்தார். ''இப்படித் தமிழை ஆராய்ந்தவர் உங்கே ஒருவருமில்லை. நீர் சொல்வதை அப்படியே நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் உது உங்கே ஒருவருக்கும் விளங்காது'' என்பன போன்ற விதப்புரைகளை உபாத்தியாயர் கூறியிருக்கிறார் என்று கைலாசபதி அவர்கள் சொல்லுவார். 1945 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஒருமுறை உபாத்தியாயரைச் சந்தித்த பொழுது அவர் 'இது ஒரு வித்தை

கைவந்த மாதிரி இருக்கிறது. அடிக்கடி சந்திக்கவேணும். கதைக்க வேணும்' என்று சொன்னாராம்.

உலகப்பெரியார்கள், தீர்க்க தரிசிகள், சமய குரவர்கள், சந்தான குரவர்கள் நூலாசிரியர்கள் ஆகியோர் கண்டது எவ்வளவு, அவர்களுடைய நிலை என்ன? என்பன பற்றிய தமது சிந்தனைகளைக் கைலாசபதி அவர்கள் உபாத்தியாயரோடு பகிர்ந்து கொள்வார். 'ஒவ்வொருவரும் அடைந்தது என்ன? அவரவர் நிலை என்ன என்பது தெரியத்தானே வேணும்' என்று உபாத்தியாயர் சொல்லுவாராம்.

## தச நாதங்களையும் பார்த்தவருக்குத் தருமம் தெரியுமா?

கொட்டிலில் இருவருடைய சம்பாஷணைகளுக்கிடையில் வயிரவியாரின் விருத்தியைப் பற்றிய கதையும் வருவதுண்டு. ஒரு முறை திரு. பொ. கைலாசபதி அவர்களுடைய திருநெல்வேலி வீட்டுக்குப் போய் வரும்படி பொன்னம்பல உபாத்தியாயருடன் வயிரவியாரை உபாத்தியாயர் அனுப்பினார். வயிரவியார் அங்கு சென்று ஒரு பகல் தங்கினார். சம்பாஷணையும் நடந்தது. அடுத்த சனிக்கிழமை திரு. கைலாசபதி அவர்கள் வழக்கம் போல அளவெட்டிக்கு வந்தார். வரும் வழியில் 'இன்று வயிரவியாரைப் பற்றிய கதை வரப்போகிறதே. அந்த ஆள் ஒரு தருமம் தெரியாத ஆளாய் இருக்கிறாரே. ஆனால் இவர் அந்த ஆளைப் பெரிய தானத்திலே வைத்திருக்கிறாரே. இந்த நிலையில் எதைக் கதைக்கிறது? எப்படிக் கதைக்கிறது?' என்ற சிந்தனை அலைகள் மனதிலே வந்து போயின. கொட்டிலில் சம்பாஷணைக்கிடையில் வயிரவியார் திருநெல்வேலிக்குப் போனது பற்றிய கதையும் வந்தது. அன்று அவர் நடந்து கொண்டமுறை பற்றியும், சம்பாஷணை பற்றியும் சொன்னார். சொல்லி முடிய உபாத்தியாயர் 'என்ன விருத்தி இருந்தாலும் இவை ஒரு தருமம் தெரியாத ஆட்கள் தானே' என்று சொன்னார்.

வயிரவியாரைப் பற்றிய தனது எண்ணமும் உபாத்தியாயரின் கூற்றும் ஒரே மாதிரி அமைந்தது திரு. பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனையை மேலுந் தூண்டியது. என்ன? எதற்கும் ஒரு துவக்கம் தருமம் தானே. தருமத்திலே தானே ஒரு நல்ல சாதகம்[4] ஆரம்பிக்க முடியும். இவருக்கு நல்லதொரு விருத்தி இருக்கிறதே. ஆனால், தருமம் தெரியாத ஆளாயும் இருக்கிறாரே! இதன் இரகசியம் என்ன? தர்மத்துக்குக் கீழேயும் நிலைகள், சாதகங்கள் உண்டோ? என்ற விசாரத்தோடு அவருடைய ஆத்மசாதனை - மெய்ப்பொருளாரர்ய்ச்சி - தொடர்ந்து கொண்டேயிருந்தது.

1945 ஆம் ஆண்டு பிற்பகுதியில் உபாத்தியாயர் மறைந்துவிட்டார். கைலாசபதி அவர்களுடைய மெய்ப்பொருளாராய்ச்சி தீவிரமாய்த் தொடர்ந்து கொண்டேயிருந்தது. படிக்க வேண்டிய நூல்களெல்லாம் படித்து முடிந்தபடியால் வாசிப்பு நின்றுவிட்டது. புதினப் பத்திரிகை கூட வாசிப்பதில்லை. கலாசாலையில் வகுப்பிலே பாடங்களைப் படிப்பிப்பார். வீட்டிலாயினுஞ் சரி, வெளியிலாயினுஞ் சரி, யாராவது ஏதாவது கேட்டால் விடை சொல்லவேண்டிய வினாவாயிருந்தால் மாத்திரம், இரத்தினச் சுருக்கமாய்ப் பேசுவார். இல்லையேல் பேச்சே வராது. 'மௌன தவ முனிவராயே' வாழ்ந்து வந்தார்.

*பண்டிதமணி மாறிவிட்டார்*

> பார்ப்பான் குலத்திலும் பறைக்குலம் மேற்குலம்
> கேட்பாரில்லாமற் கீழ்க்குலமானது

என்பது ஓர் முதுமொழி. 'ஒரு உண்மையைக் காண்பவருடைய நிலையிலும் பார்க்க, அதை மற்றவர்களுடன் பேசிப்பறைந்து, அந்த அறிவை விருத்தி செய்து கொள்பவருடைய நிலை மேலானது. அதைக்கேட்கக் கூடிய தகுதியுடையோர் இன்மையால் அவருடைய நிலை உயராமல் கீழ்நிலையிலேயே இருந்தது' என்பது தாற்பரியம்.

கைலாசபதி அவர்கள் 'இங்கே யாருடன் பேசலாம் என்று யோசித்தால் மௌனம் தான் வரும்' என்பார். பண்டிதமணியவர்கள் கைலாசபதிஅவர்கள் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே – 1922 ஆம் ஆண்டளவில் தொடங்கி – அவரோடு பழகிப் பின் பல்லாண்டுகள் உடனாசிரியனாயுமிருந்தார். அவர் வேறு சாதி ஆள் என்பது தெரியும். அவருடைய நுண்மாண்நுழைபுலம், கல்வி, ஒழுக்கம் தூய வாழ்க்கை முறை எல்லாம் நன்கு தெரியும். 'அவர் மனித உருவில் ஒரு தெய்வம்' என்று 1934 இல் ஒரு சந்தர்ப்பத்தில் தனது பெருமதிப்புக்குரிய மனேஜர் திரு. த. கைலாசபிள்ளைக்கே எழுதியிருக்கிறார். இருந்தும் என்! அவரிடம் கேட்கும் தவம் பல்லாண்டுகளாய் லபிக்காமலேயிருந்தது. எனினும், பண்டிதமணியவர்களின் நல்லூழ் 1941 ஆம் ஆண்டு முதல் தொழிற்படத் தொடங்கியது. ''திருவருட்பய'' னில் சில பகுதிகளுக்கு விளக்கம் கேட்பதற்கு அவரிடம் சென்றார். கேள்வியில் நாட்டம் பிறந்தது கண்டு அவருடன் தமது ஆராய்ச்சிகள் பற்றிப் பேசத் தொடங்கினார்.

கல்லூரியில் ஓய்வு வேளைகளில் குறிப்பு எழுதுவதற்கு ஆயத்தமாய் பண்டிதமணி அவருக்குப் பக்கத்திலேயே போயிருப்பார். அவர் சொல்லிக் கொண்டேயிருப்பார். சில வேளைகளில் பண்டிதமணி அயர்ந்து விடுவார். அவர் பேசாமலிருப்பார். விழித்தவுடன் சொல்லத் தொடங்குவார். அடுத்த நாள் அப்படிச் சந்தர்ப்பம் வரும் பொழுது முதல் நாள் விட்ட இடத்திலிருந்து சொல்லுவார்.

'அவர் எதையோ பார்த்துச் சொல்வது போலச் சொல்லிக் கொண்டு போகிறார். அவர் சொல்லியவற்றில் அநேகமானவை எனக்கு விளங்கவில்லை. அவை எந்த நூலிலும் இல்லாதவை. ஆனால் நூல்களின் கருத்துக்கு முரணானவையல்ல. எனக்கு விளங்கிய சிலவற்றைக் குறிப்பெடுத்தேன். அவற்றில் சில கருத்துக்களைத்தான் பேசியும் எழுதியும் பார்க்கிறேன்' என்று பலமுறை பண்டிதமணியவர்கள் ஆராமையுடன் கூறுவதுண்டு.

> 'விந்துவை வீணாக்கக்கூடாது. அது கருக் கொள்ளக் கூடிய இடத்திலே தான் விட வேணும். சொல் விந்தின் அம்சமானது. அதை வீண் செய்யக்கூடாது. பயன் செய்யக் கூடிய இடத்திலேதான் சொல்ல வேண்டும். முத்துக்களை வீணே சிந்தலாமா?' என்பார் திரு. பொ. கைலாசபதி அவர்கள்.

சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின் ஒரு நாள் அவரைச்சந்திப்பதற்கு பண்டிதமணி அளவெட்டியிலுள்ள அவரது வீட்டிற்குப் போனார் (1957). அன்று அவர் ஒரு சொல்லும் பேசவில்லை என்று பிறகு எனக்குச் சொன்னார்.

தமது ஆசிரியர்களாகிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், நல்லூர் த. கைலாசபிள்ளை ஆகியோர்களிடம் தான் கற்றது வெறும் சொற்பொருளே என்றும் கைலாசபதி அவர்களிடமே தான் நூல்களின் உண்மைப் பொருளை அறிந்ததாயும் பண்டிதமணி எனக்குக் கூறியிருக்கிறார். அவரிடம் கேட்டறிந்த வற்றிலும் பார்க்க அவருடைய ஒழுக்க சீலத்தையும் வாழ்க்கை முறையையும் பார்த்து நாம் படித்தவை பல. நள்ளிருளில் நடுக்கடலில் திசையறியாது தவிக்கும் மாலுமிக்குச் கலங்கரை விளக்கம் போல வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கிடையில் அவர் ஒரு கலங்கரை விளக்கமாயும் உரை கல்லாயும் உதவியிருக்கிறார்.

பண்டிதமணி குத்தலாக, கிண்டலாக, சிலேடையாய் பேசுபவர், எழுதுபவர் என்பது பொதுவான அபிப்பிராயம். நீண்ட காலம் அவர் அப்படித்தானிருந்தார். ஆனால் கைலாசபதி அவர்களுடைய தொடர்பால் சாதாரண பண்டிதராய் இருந்தவர் ஒரு சமயியாயே மாறி விட்டார் எனலாம்.

## அவையறிந்து, சொல்லின் தொகையறிந்து, சொல்லுந் தூய்மையர்[5]

ஒரு விஷயத்தைக் கைலாசபதி அவர்களிடம் கேட்டால், அவர் கேட்பவருடைய தகுதி நோக்கி அவருக்கேற்ற விடையையே கொடுப்பார். தனக்கு அதிகம் தெரியும் என்பதற்காய்க், கேட்பார் யார் என்பதை யோசிக்காமல் பேசமாட்டார். ஒரே கதையையே வெவ்வேறு ஆட்களுக்கு வெவ்வேறு விதமாகச் சொல்லுவர். அளவறிந்து பேசுவார். பேச வந்தால் பேசுவர்; வராவிட்டால் வலிந்து பேசமாட்டார்.

ஒரு முறை ஏழாலையில் ஒரு கூட்டம் நடந்தது. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் சம்பந்தமான கூட்டமாயிருக்கலாம். சங்க மனேஜர் சு. இராசரத்தினம் கூட்டத்திற்கு இவரையும் அழைத்துச் சென்றார். பேச்சாளர்கள் பேசினார்கள். 'இப்பொழுது திரு. கைலாசபதி அவர்கள் சில வார்த்தைகள் பேசுவார்கள்' என்று தலைவர் கூறினார். இவர் எழுந்து மேடையில் நின்று தலையைத் திருப்பி எல்லாப் பக்கமும் பார்த்துவிட்டு, ஒன்றும் பேசாமலே அமர்ந்து விட்டார் அக்கூட்டத்திலிருந்த கட்டுவனைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரே இக்கதையை எனக்குச் சொன்னார்.

திருநெல்வேலிச் சந்தியிலிருக்கும் இந்து இளைஞர் மன்றத்திலே திருக்குறள் பற்றிப் பேசும்படி ஒருமுறை கைலாசபதி அவர்களை அழைத்தார்கள். என்ன பேசலாம் என்று யோசித்த பொழுது அவருக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. ஒரு முறை அவர் தெருவால் நடந்து செல்லும் பொழுது அளவெட்டியிலிருந்து மாட்டுவண்டியிற் சென்றவர்கள் 'உபாத்தியார் ஏறுங்கோ' என்று சொல்லிப் பின் வண்டியில் ஏற்றிக் கொண்டு போனார்கள். வண்டியில் இருந்தவர்கள் புகையிலை வியாபாரிகள். ஒருவர் ஆங்கிலமும் கொஞ்சம் படித்தவர். தங்கள் வியாபாரம் பற்றியும் வேறு உலக விஷயங்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். கைலாசபதி அவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாமலிருந்ததைக் கண்ட அந்த ஆங்கிலம் கற்றவர், 'இயூக்கிளிட்டில் ( Euclid ) ஏதாவது கேட்டால் உபாத்தியார் சொல்லுவார். இந்த விஷயங்களைப்பற்றி அவருக்கென்ன தெரியும்? என்று சொன்னார். இந்தக் கதையைக் கூட்டத்திலே சொல்லி 'நாங்கள் திருக்குறளும் படித்திருப்போம் என்று அவர் யோசித்திருந்தால், அப்படிச் சொல்லியிருக்க மாட்டார். ஏனென்றால் திருக்குறள் படித்தவர் பலதும் அறிந்தவர் என்று சமுதாயத்திலே அவருக்கு ஒரு தனி மதிப்புண்டு. திருக்குறள் என்றாலே பொது

மறை, தமிழ்மறை என்ற ஒரு விசேட மதிப்பு இருக்கிறது' என்று இப்படிப் பொது வான சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார். பண்டிதமணி தான் ஒரு நாள் சாயந்தரம் உலாவிக் கொண்டு சந்திக்கு வந்த பொழுது அக்கூட்டத்தைக் கண்டு எட்டிப்பார்த்த பொழுது இவர் பேசிக் கொண்டு நின்றதைக் கண்டதாய் எனக்குச் சொல்லியிருக்கிறார்.

சில காலத்தின் பின்னர் சைவாசிரிய கலாசாலை மாணவர் மன்றத்திலே கைலாசபதி அவர்களைத் திருக்குறள் பற்றிப் பேசும்படி கேட்டார்கள். என்ன பேச லாம் என்று யோசித்துக் கொண்டு எழுந்தார். சபையின் பின்னே குறிப்பெடுப்பதற்கு ஆயத்தமாய் ஒருவர் பேனையும் கையுமாய் இருப்பதைக் கண்டார். கேட்பதற்கு ஏற்ற ஒருவர் இருப்பதைக்கண்டு இதுவரை ஒருவரும் சொல்லாத ஒரு - புதிய கருத்தை அன்று சொன்னார்: 'திருக்குறட் பாயிரம் முழு நூலுக்கும் பாயிரமாயும் இருக்கிறது; அறத்துப்பாலின் ஒரு பகுதியாயுமிருக்கிறது. கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் ஆகிய நான்கு அதிகாரங்களும் எதிர் நிரனிறையாய் அறம், பொருள், இன்பம், வீடு, ஆகிய நான்கிற்கும் பாயிரம்' என்று சொன்னார்.

இந்த இரண்டு பேச்சுக்களையும் பற்றி உபஅதிபர் தானே ஒருமுறை எனக்குச் சொன்னார். ''முப்பாலில் நாற்பால மொழிந்தபுலவன்'' என்று திருவள்ளுவ மாலையில் கூறப்பட்டது எனது நினைவுக்கு வந்தது.

# II கைலாசபதி ஸ்மிருதி[7]

## புத்தி விருத்தி

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் நான்கையும் பற்றி நூல்கள் பேசுகின்றன. 'அறம் பொருள், இன்பம், வீடடைதல் நூற்பயனே' என்பது பழைய சூத்திரம். வியாக்கியான கர்த்தாக்கள் தத்தமக்கு எட்டியவாறு உரை செய்திருக்கிறார்கள். அபிப்பிராயங்கள் பலவாறாய் இருப்பினும் ஒரு நல்ல முறையான சாதகி[8] தர்மம் தெரிந்தவராய், தர்மநெறி தவறாதவராய் இருத்தல் வேண்டுமென்பதில் அதிக அபிப் பிராய பேதம் இருக்க முடியாது. தர்மம் என்றால் என்ன என்பதுதான் சாதகியின் முக்கிய பிரச்சினை யாயிருக்கும்.

தருமமென்றொரு பொருளுளது தாவிலா
விருமையி னின்பமு மெளிதி னாக்குமா
லருமையில் வரும் பொருளாகு மன்னது
மொருமையி னோர்க்கலாலுணர்தற் கொண்ணுமோ.

என்பது கந்தபுராணம்.[9] கந்தபுராணப் பயிற்சி மிக்க அளவெட்டியிற் பிறந்து வளர்ந்த கைலாசபதி அவர்களுக்கு இளமை தொடங்கியே தர்மத்தைப்பற்றிய விசாரம் இருந்தது. தர்மத்தைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தவருக்கு 'தர்மம் தெரியாதவர் தசநாதங்களையும் பார்த்தார்' என்பது பல புதிய காரியங்களை அறிவதற்குத் தூண்டுதலாய் அமைந்தது. 1946 ஆம் ஆண்டு துவங்கி அவரிடத்தில் பல புதிய அநுபவங்கள் காணப்பட்டன. பல புதிய காரியங்கள் காட்சியாய் அவருக்குத் தோன்றின.

தர்மத்துக்குக் கீழே ஒன்பது படிகளை அவர் கண்டார்.

9. பண்பாடு
8. சம்ஸ்காரம் அல்லது சுத்தி
7. நாகரிகம்
6. நல்லார்வம்
5. பொதுவிவேகம்
4. கலைஞானம் (ஞாநம்)
3. சுட்டிப்பான கிரகிப்பு
2. சீவனம்
1. கேவலக்கிடை

என்பன அவை.

மிகக் கீழேயுள்ளது கேவலக்கிடை. மற்றவை மேன் மேலுள்ளவை. ஒவ்வொரு படியும் தளம் அல்லது பூமி எனப்படும் கேவலக்கிடைவெறும் தளம்மாத்திரந்தான். அதற்கு ஒரு நோக்கு இல்லை. சீவன தளம் முதல் மேலுள்ளவை நோக்குகளோடு சேர்ந்தவை. அதாவது சீவன நோக்கோடு சேர்ந்த தளம், சுட்டிப்பான கிரகிப்போடு சேர்ந்த தளம் என்றிவ்வாறு மேலே பார்க்கலாம்.

உலக மக்களில் 99.9 சதவீதத்தினர் கேவலக்கிடையிலே கிடப்பவர்கள் தான். அவர்களுடைய நோக்கு சீவனத்தோடு சேர்ந்ததாயே இருக்கும். அவர்கள் சுட்டிப்பான கிரகிப்பு நோக்கு, கலைஞானநோக்கு, பொது விவேக நோக்குகளையும் எட்டிப் பார்ப்பர்.

நினைத்த காரியம் சொல்லுதல், சாத்திரம் சொல்லுதல், உருப்பற்றுதல் (கலை ஆடுதல்) ஆகியவை சுட்டிப்பான கிரகிப்போடு சேர்ந்தவை. அறுபத்துநாலு கலைகளும் கலைஞான தளத்தோடு சேர்ந்தவை. சாதாரண உலகம் போற்றக்கூடிய மிகப்பெரிய காரியம் பொது விவேகந்தான் (General Intelligence). ஏனெனில் பொது விவேகந்தான் சாதாரணமானவர்களுக்கு எட்டக்கூடிய ஆகப்பெரிய இடம். நல்லார்வத்தின் இடம் பொதுவிவேகத்திற்கு மேலே. நல்லார்வ நோக்குள்ளவர் ஆயிரத்தில் ஒருவர் தான். நல்ல காரியங்கள் செய்யத்தான் வேண்டும் என்ற உள்ளக்கிளர்ச்சி உடையவர்கள் அவர்கள் தான். அவர்கள் தான் உண்மையான சமூக சேவையாளர். அவர்களே சமூக சேவைத் தொண்டர் (social service voluateers). நல்லார்வ நோக்கிற்கு மேலே நாகரிக நோக்கு. எது கொண்டாடத்தக்கது? எதை விலகி நடக்க வேணும் என்ற பிரச்சினைகள் நாகரிக நோக்குடையவர்களுக்குத்தான் இருக்கும். நல்லார்வ நோக்குவரை மாத்திரம் எட்டுவோர் எதையும் கொண்டாடுவர். கொள்ளத்தக்கன இவை, தள்ளவேண்டியன இவை என்ற பிரச்சினை இல்லாமலிருக்கும். நாகரிக நோக்குடையவர் பெரிய வேதாந்தங்களையும் பேசுவர். ஆனால் சுத்தியைப்பற்றிய யோசனை-பிழை செய்தேன், செய்கின்றேன் என்ற எண்ணம் – வராது. தங்களில் அழுக்கு இருப்பது தெரியாது.

அதற்கு மேலே சம்ஸ்காரம் அல்லது சுத்தியின் நோக்கோடு சேர்ந்த தளம், சுத்தியின் நோக்கு உள்ளவர்கள் தான் தங்களிலுள்ள பிழைகளை - அழுக்குகளை-ஒத்துக் கொள்பவர்கள். மற்றவர்களுக்குப் பிழை என்று ஒன்றில்லை. தங்களில் மன அழுக்கு இருப்பது அவர்களுக்குத் தெரியாது. 'சம்ஸ்கார பராமரிசவுண்மையானும்' அதின்இன்மை கூறப்படலானும்' என்பது ஆப்த வாக்கியம்.[10] அதாவது, சுத்தியின்

ஆராய்ச்சியாலே உண்மை புலனாகும். வைதிகக் கிரியைகளில் நாற்பது வகையான சம்ஸ்காரங்கள்[11] கூறப்படும். அவை மனித ஆன்மாவைச் சுத்தியாக்கிப் பண்படுத்துவன.

ஒன்பதாவது, பண்பாட்டு நோக்கோடு சேர்ந்த தளம். மேலைத்தேசத்தவர்கள் பெரிதாகப்பேசும் கலாசாரம், விரிந்த மனப்பான்மை ( culture, broadmindedness ) என்பன 'இத்தளத்தோடு சேர்ந்தவை. ' துனியில் காட்சி[12]- கறள் இல்லாத நோக்கு - கணநேர வெகுளி ' [13] என்பன பண்பாட்டு முதிர்ச்சியின் அடையாளங்கள்.

நல்லார்வம் முதல் பண்பாடு இறுதியான விருத்திகளையடைந்தவர் உலகில் மிகச் சிலர் தான் இருப்பர். அவற்றிற்கு மேலேயுள்ள தருமந் தெரிந்தவர்களைக் காண்டலரிது. இராமகிருஷ்ண பரமஹம்சரும், தசநாதங்களையும் கேட்கும் பேறு பெற்ற வயிரவியார் போன்றவர்களும் பண்பாட்டு நோக்குள்ளவர்கள். பண்பாட்டு நோக்குவரை எட்டக்கூடியோர் வேறும் சிலர் இருக்கலாம். ஆனால் இந்த இருவருக்கும் வேறொரு தனிச் சிறப்பு உண்டு. அவர்கள் கேவலக்கிடைக்குக் கீழே இறங்கமாட்டார்கள். அப்படி இறங்காமலிருப்பவர்கள் தான் சாதிமான்கள்[14] எனப்படுவோர். கேவலக்கிடைக்குக் கீழேயும் போகக் கூடியவர்கள் பெரிய ஞானங் களையும் பேசினாலும், சில சமயங்களில் 'உங்கே ஒன்றுமில்லை' என்று பேசுகிற நிலையும் அடைவார்கள். மிகக் கீழான காரியங்களையும் செய்வர்.

பண்பாட்டு நோக்கோடு சேர்ந்த தளத்துக்கு மேலே ஒன்பது நோக்குகளோடு சேர்ந்த தளங்களுண்டு. அவை பின்வருமாறு:

10. தர்மம்
11. அர்த்தம்
12. காமம்
13. மோட்சம்
14. அமிர்தம்
15. ஞானம்
16. சித்தாந்தம்
17. சத்
18. முடிந்தசத்தியம்

இவற்றிற்கு மேலே ஆறு தளங்களுண்டு. அவை வருமாறு:

1. அகண்டாகாரம்
2. சித்
3. முடிந்த ஞானம்
4. ஆனந்தம் அல்லது திருவடி
5. ஆதிப்பிரமம் அல்லது மூல சித்தாந்தம்
6. சிவம்

முதற் கட்டில் ஒன்பதும் இரண்டாங்கட்டில் ஒன்பதும் மூன்றாம் கட்டில் ஆறுமாய் இருபத்து நான்கு தளங்கள் புத்திவிருத்தியிலுண்டு. புத்திக்கு அதிதெய்வம் விஷ்ணு. விஷ்ணு மூன்று அடியால் உலகை அளந்தார் என்பது புராணம். புத்தி விருத் தியிலுள்ள மூன்று கட்டுகளுள் புத்தியால் அறியக் கூடியவை எல்லாம் அடங்கும். பைபிள் எழுதிய ஞானிகள் (Saints) எனப்படுவோர்- தர்ம நோக்குள்ளவர்கள். அவர் களிலுள்ள இன்னொரு விசேஷம் அவர்கள் சீவன தளம் வரைதான் இறங்குவர்.

கேவலக்கிடைக்கு இறங்கார். கேவலக்கிடைக்குக் கீழே போகாதவர்கள் முதலாம் சாதி என்றால், சீவனத்திற்குக் கீழே போகாதோர் அவர்களிலுயர்ந்த இரண்டாம் சாதி எனலாம்.

யக்ஞங்களைச் செய்த க்ஷத்திரியர் அர்த்த நோக்குத் தெரிந்தவர்கள். அவர்கள் சுட்டிப்பான கிரகிப்பு வரைதான் இறங்குவர். சீவனத்துக்கு இறங்கார். சீவன நோக்கு இல்லாதபடியால் அவர்களுக்கு வீரம் இருந்தது. இவர்கள் மூன்றாவது சாதி.

கான்ற் (Kant), ஹெகெல் (Hegel), ஷேக்ஸ்பியர் ஆகியவர்கள் காம நோக்கை எட்டக் கூடியவர்கள். ஆனால் கேவலக்கிடைக்குக் கீழேயும் இறங்குவர். பிளேட்டோவும் சோக்கிரதீசும் மோட்ச நோக்குத் தெரிந்தவர்கள். அவர்களும் கேவலக்கிடைக்குக் கீழேயும் போகக் கூடியவர்கள்.

மோட்ச நோக்கிற்கு மேலுள்ள இடங்களை மேலைத் தேசத்தவர்கள் எட்டவில்லை. அமிர்த நோக்கைத் தெரிந்தவர்கள், மேற்கு நாடுகளில் இருந்ததாகத் தெரியவில்லை. அமிர்த நோக்காவது தெரிந்தவரைத்தான் வைதிகரா்ய் உள்ளவர்கள் ஒத்துக்கொள்வார்கள். (வைதிகர் என்ற பதம் இப்பொழுது பிறழ்வான கருத்தில் வழங்குகின்றது. வைதிகராவோர் வேதநெறி தெரிந்தோர். அமிர்த நோக்காவது உள்ளவர் தான் ஒரு முறையான சாதகத்தைச் செய்யத் தொடங்கலாம் என்று இங்கேயுள்ள பெரியவர்கள் சொல்லுவர். அமிர்த நோக்குத் தெரிந்தவர்கள் அரதத்த சிவாசாரியார் 14—1 விதுரர், விவேகாநந்தர், மகாத்மாகாந்தி, சிவஞான முனிவர் ஆகியோர். ஞான நோக்குத் தெரிந்தவர்கள் அரவிந்தர், ஆறுமுகநாவலர், நக்கீரர் முதலியோர்.

சித்தாந்த நோக்குடையவர்கள் சேக்கிழார், உமாபதிசிவாசாரியார், கச்சியப்பர், வியாசர் போன்றோர்.

முடிந்த சத்தியத்தைத் தெரிந்தவர்கள் விசுவாமித்திரர், ஆழ்வார்கள், அநுமார், வசிட்டர், சுகர் ஆதியோர்.

சத் நோக்குள்ளவர்கள் இராமர், அருணந்திசிவாசாரியார், மாணிக்கவாசகசுவாமிகள், மறைஞானசம்பந்தர், மெய்கண்டார் ஆகியோர்.

அகண்டாகார நோக்குள்ளவர்கள் வியாக்கிரபாதர், திருமூலர், திருவள்ளுவர், பிரமா ஆகியோர்.

சித் நோக்கைத் தெரிந்திருந்தோர் திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தர், கிருஷ்ணர் ஆகியோர்.

முடிந்த ஞான நோக்குள்ளவர்கள் ரிஷிவாமதேவர், திருநந்திதேவர், பதஞ்சலி முனிவர், சனகாதிநால்வர்.

ஆனந்தம் அல்லது திருவடியைத் தெரிந்தவர்கள் அகஸ்தியர், தக்ஷிணாமூர்த்தி, சுப்பிரமணியர், விஷ்ணுமூர்த்தி, விநாயகர், காசிவிஸ்வநாதர், உருத்திரர் ஆகியோர்.

சோமாஸ்கந்தரும், சிற்சபேசரும் ஆதிப்பிரமத்தின் நோக்கு தெரிந்தவர்கள்.

சிவத்தின் நோக்குத் தெரிந்தவர்கள் ஊர் பேர் கழிந்தவர்கள். அவர்கள் போய்ப் போய் ஒழிந்து போனவர்கள். சிவத்தைக் கண்டவர், விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.

ஒரே நோக்குத் தெரிந்தவர்களுள்ளும் நிற்கும் இடம் பற்றியும், கீழே இறங்கும் எல்லை பற்றியும், வேறு பல காரணங்களாலும் தாரதம்மியங்கள், வேறுபாடுகள் உண்டு.

புத்திவிருத்தியில் முதற் கட்டிலுள்ள கேவலக்கிடை முதலான ஒன்பதும் தர்மத்துக்கு அங்கமானவை. அத்தளங்களில் துறைகள் இல்லை. ஏனைய பதினைந்து பூமிகளிலும் ஐம்பத்தொரு துறைகளுண்டு. அவை ஐம்பத்தொரு அட்சரங்கள் சம்பந்தமானவை.

## சொரூப தடஸ்தங்கள்

ஞான நூல்களிலே பேசப்படுகிற சத், சித், ஆனந்தம், சிவம் நான்கும் சொரூபங்கள். ஒருவரும் அடைவதில்லை. ஆனால் புத்திக்கு எட்டக் கூடியதாய் ஒரு வகையில் அமைந்துள்ளவை தான் புத்தி விருத்தியிலுள்ள சத், சித், ஆனந்தம், சிவம்; இவற்றின் தடஸ்தங்கள் முறையே சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் 15 என்பன. சத் என்ற சொரூபம் இருக்கிறபடியால் சத்தியம் என்ற தடஸ்தம் இருக்கிறது. சித் என்ற சொரூபம் இருக்கிறபடியால் ஞானம் என்ற தடஸ்தம் இருக்கிறது. ஆனந்தம் என்ற சொரூபம் இருக்கிறபடியால் அநந்தம் என்ற தடஸ்தம் இருக்கிறது. சிவம் என்ற சொரூபம் இருக்கிறபடியால் பரமம் என்ற தடஸ்தம் இருக்கிறது.

தடஸ்தங்கள் சொரூபத்தைப் போல இருக்கின்றனவேயன்றி சொரூபத்திலிருந்து வரவில்லை. சத் இருக்கிறபடியால் இங்கே சத்தியம் இருக்கிறது. சித் இருக்கிறபடியால் ஞானம் இருக்கிறது. அப்படியே அப்பாலும்.

தர்மம், அர்த்தம், மோட்சம், முடிந்த சத்தியம், நான்கும் சத்திய சம்பந்தமானவை. காமம், ஞானம், முடிந்த ஞானம் மூன்றும் ஞானம் சம்பந்தமானவை.

அமிர்தம், அகண்டாகாரம் இரண்டும் அநந்தம் சம்பந்தமானவை.

சித்தாந்தம், மூலசித்தாந்தம் இரண்டும் பிரமம் சம்பந்தமானவை.

முடிந்த சத்தியம் பொருளாயிருக்க மோட்சம் அதன் சாயையாய் இருக்கிறது

மோட்சம் பொருளாயிருக்க அர்த்தம் அதன் சாயையாய் இருக்கிறது.

அர்த்தம் பொருளாயிருக்க தர்மம், அதன் சாயையாய் இருக்கிறது.

முடிந்த ஞானம் பொருளாயிருக்க ஞானம் அதன் சாயையாய் இருக்கிறது.


ஞானம் பொருளாயிருக்க காமம் அதன் சாயையாய் இருக்கிறது.

அகண்டாகாரம் பொருளாயிருக்க அமிர்தம் அதன் சாயையாய் இருக்கிறது.

மூல சித்தாந்தம் பொருளாயிருக்க சித்தாந்தம் அதன் சாயையாய் இருக்கிறது.

சாயையை ஸ்திரப்படுத்த பொருளுடன் ஒட்டிச் சாதிக்கலாம்.

## தளங்கள்: பிம்பங்களும் பிரதிபிம்பங்களும்



புத்திவிருத்தியில் முதலாங்கட்டிலுள்ள பண்பாடு முதல் கீழே கேவலக்கிடை ஈறான ஒன்பது தளங்களும், இரண்டாங் கட்டிலுள்ள தர்மம் முதல் மேலே சத் ஈறான ஒன்பது தளங்களினதும் பிரதிபிம்பங்கள். முதலாங் கட்டிலுள்ளவை பிரதிபிம்பங்கள், இரண்டாங் கட்டிலுள்ளவை பிம்பங்கள்.

1. தர்ம தளத்தின் பிரதிபிம்ப தளம் பண்பாட்டுத் தளம்.
2. அர்த்த தளத்தின் பிரதிபிம்ப தளம் சம்ஸ்கார தளம்.
3. காம தளத்தின் பிரதிபிம்ப தளம் நாகரிக தளம்.
4. மோட்ச தளத்தின் பிரதிபிம்ப தளம் நல்லார்வ தளம்.
5. அமிர்த தளத்தின் பிரதிபிம்ப தளம் பொதுவிவேக தளம்.
6. ஞான தளத்தின் பிரதிபிம்ப தளம் கலைஞான தளம்.
7. சித்தாந்த தளத்தின் பிரதிபிம்ப தளம் சுட்டிப்பான கிரகிப்புத் தளம்.
8. முடிந்த சத்திய தளத்தின் பிரதிபிம்ப தளம் சீவன தளம்.
9. சத் தளத்தின் பிரதிபிம்ப தளம் கேவலக்கிடைத் தளம்.

இவ்வாறே இரண்டாங் கட்டிலுள்ள தளங்கள் மூன்றாம் கட்டிலுள்ளவற்றின் பிரதிபிம்பங்கள். (13 ஆம் பக்க விளக்கம் படம்பார்க்க)

1. அகண்டாகார தளத்தின் பிரதிபிம்பம் சத் தளம்.
2. சித் தளத்தின் பிரதிபிம்பம் முடிந்த சத்திய தளம்.
3. முடிந்த ஞானதளத்தின் பிரதிபிம்பம் சித்தாந்த தளம்.
4. ஆனந்த தளத்தின் பிரதிபிம்பம் ஞான தளம்.
5. மூலசித்தாந்த தளத்தின் பிரதிபிம்பம் அமிர்த தளம்
6. சிவ தளத்தின். பிரதிபிம்பம் மோட்ச தளம்.

இவ்வாற்றால் காம, அர்த்த, தர்ம தளங்களுக்கு மேலே பிம்பங்களில்லை. அவைதாமே பிம்பங்கள். பிரதிபிம்ப தளங்களைப் பிம்பங்களோடு ஒட்டிச்சாதிப்பது ஒருவகையான சாதகம். அது பிரதிபிம்பத்தை ஸ்திரப்படுத்துகிற சாதகம். தர்ம, அர்த்த, காம தளங்களுக்குப் பிம்பங்கள் இல்லாதபடியால் ஒட்டிச் சாதிக்கிற முறையில் அவற்றை ஸ்திரப்படுத்த முடியாது.

1. கேவலக்கிடைத் தளத்தை அதன் பிம்பமான சத் தளத்துடன் ஒட்டிச்சாதிக்கிற முறையில் வந்தவைதான் பொங்கல், புழுக்கல், பறை முழக்கலாதியன.


2. சீவன தளத்தை அதன் பிம்பமான முடிந்த சத்திய தளத்துடன் ஒட்டிச்சாதிக்கிற முறையில் தோன்றியதுதான் பைபிள்; முடிந்த சத்தியத்தின் ஒரு அம்சம் பைபிளில் இருப்பதுதான் அதன் சிறப்பு. ஆனால் முடிந்த சத்திய தளத்துக்கு விரியக்கூடியவர்கள் சொல்வது அத்தளத்துக்கு விரியாதவர்கள் சொல்வதிலும் பார்க்கச் சிறந்ததாய், கூடிய தெளிவுள்ளதாயிருக்கும்.

3. ஞானதளத்துக்கு விரியக்கூடியவர்கள் அதன் பிம்பமான திருவடித்தளத்தோடு ஒட்டிச் சாதித்து அதில் லயித்துப் போயிருத்தல்தான் 'திருவடிக்கீழ் நீங்காதே தூங்குதல்'?[16]

4. மோட்ச தளத்தில் கிடந்து பிம்பமான சிவத்தைச் சாதிப்போர்தான் வேதாகமங்களிற் கூறப்படும் மூர்த்திகள். உலகில் இதற்கு இலக்கியம் காட்டமுடியாது.

## புத்தி விருத்திப் படம்

| | |
|---|---|
| | * பரப்பிரமம் |
| | * பரநாதம் |
| | * பரவிந்து |
| | * நாதம் |
| | * விந்து |
| | * சாதாக்கியம் |
| | * ஈசுரம் |
| | * சுத்தவித்தை |
| | * மாயை |
| | * கலை, காலம், நியதி |
| 24 சிவம் | * வித்தை |
| 23 ஆதிப்பிரமம் அல்லது மூலசித்தாந்தம் | * ராகம் |
| 22 ஆநந்தம் அல்லது திருவடி | * புருஷன் |
| 21 முடிந்த ஞானம் | * சித்தம் |
| 20 சித் | * புத்தி |
| 19 அகண்டாகாரம் | * அகங்காரம் |
| 18 சத் | * மனம், பொறிபுலன்கள் |
| 17 முடிந்த சத்தியம் | * பூதம் * துரியாதீதம் |
| 16 சித்தாந்தம் | a b c |
| 15 ஞாதம் | d e f g |




14 அமிர்தம்

13 மோட்சம்

12 காமம்

11 அர்த்தம்

10 தருமம்

9 பண்பாடு

8 சம்ஸ்காரம்

7 நாகரிகம்

6 நல்லார்வம்

5 பொதுவிவேகம்

4 கலைஞானம்

3 சுட்டிப்பான கிரகிப்பு

2 சீவனம்

1 கேவலக்கிடை

a துரியம் b சுழுத்தி c சொப்பனம்

d சாக்கிரம் e நெற்றியில் துரியாதீதம் f நெ. துரியம் g நெ. சுழுத்தி

h நெ. சொப்பனம் i நெ. சாக்கிரம் j சத்தியலோகம் k தவலோகம் l ஜனலோகம்

m மகலோகம் n சுவர்லோகம் o புவர்லோகம் p பூலோகம்

1 — 9 முதலாங்கட்டு

10 — 19 இரண்டாங்கட்டு

19 — 24 மூன்றாங்கட்டு

## தளங்களோடு சேர்ந்த நோக்குகள்: பிம்பங்கள், பிரதிபிம்பங்கள்

கேவலக்கிடை வெறும் தளம் மாத்திரம்தான். அதற்கு ஒரு நோக்கு என்றில்லை. பண்பாட்டு நோக்கு முதல் சீவன நோக்கு ஈறானவை அர்த்த நோக்கு முதல் சத் நோக்கு ஈறானவற்றின் பிரதிபிம்பங்கள். தர்ம நோக்கிற்குப் பிம்பமும் இல்லை, பிரதிபிம்பமும் இல்லை; பிம்பமும் இல்லை. அந்த முறையில் அதை ஸ்திரப்படுத்துவது மிகக்கடினம். அர்த்தநோக்கிற்குப் பிம்பம் இல்லை.

1. அர்த்த நோக்கின் பிரதிபிம்ப நோக்கு பண்பாட்டு நோக்கு.
2. காம நோக்கின் பிரதிபிம்ப நோக்கு சம்ஸ்கார நோக்கு.
3. மோட்ச நோக்கின் பிரதிபிம்ப நோக்கு நாகரிக நோக்கு.
4. அமிர்த நோக்கின் பிரதிபிம்ப நோக்கு நல்லார்வ நோக்கு.
5. ஞாந நோக்கின் பிரதிபிம்ப நோக்கு பொதுவிவேக நோக்கு.
6. சித்தாந்த நோக்கின் பிரதிபிம்ப நோக்கு கலை ஞாந நோக்கு
7. முடிந்த சத்திய நோக்கின் பிரதிபிம்ப நோக்கு சுட்டிப்பான கிரகிப்பு நோக்கு.
8. சத் நோக்கின் பிரதிபிம்ப நோக்கு சீவன நோக்கு.


அதாவது, முதற்கட்டிலுள்ள நோக்குகள் இரண்டாங்கட்டிலுள்ள நோக்குகளின் பிரதிபிம்பங்கள். தர்ம அர்த்த நோக்குகள் தவிர்ந்த இரண்டாங்கட்டிலுள்ள ஏனைய நோக்குகள் மூன்றாம்கட்டிலுள்ளவற்றின் பிரதிபிம்பங்கள்.

சத் நோக்கிற்குப் பிம்பம் இல்லை.

1. அகண்டாகார நோக்கின் பிரதிபிம்ப நோக்கு முடிந்த சத்திய நோக்கு.
2. சித் நோக்கின் பிரதிபிம்ப நோக்கு சித்தாந்த நோக்கு.
3. முடிந்த ஞான நோக்கின் பிரதிபிம்ப நோக்கு ஞான நோக்கு.
4. ஆனந்தத்தின் பிரதிபிம்ப நோக்கு அமிர்த நோக்கு.
5. ஆதிப்பிரமத்தின் பிரதிபிம்ப நோக்கு மோட்ச நோக்கு.
6. சிவத்தின் பிரதிபிம்ப நோக்கு காமத்தின் நோக்கு.

1. காமத்தின் நோக்கைப் பிம்பமான சிவத்துடன் ஒட்டிச்சாதிப்பவர்கள் தான் அருட் குருவாயிருப்பவர்கள்.
2. மோட்ச நோக்கைப் பிம்பமான ஆதிப்பிரமத்துடன் ஒட்டிச்சாதிப்பவர்கள் தான் பிரமரிஷிகள்.
3. அமிர்த நோக்கைப் பிம்பமான திருவடியின் நோக்கோடு ஒட்டிச்சாதிப்பது தான் திருவடி ஞானம்.
4. ஞான நோக்கை பிம்பமான முடிந்த ஞாநநோக்குடன் ஒட்டிச்சாதிப்பது தான் பர ஞானம்.
5. சித்தாந்த நோக்கை பிம்பமான சித்தின் நோக்கோடு ஒட்டிச்சாதிப்பது பாச ஞானம்.
6. முடிந்த சத்திய நோக்கை அகண்டாகார நோக்குடன் ஒட்டிச்சாதிப்பது பசு ஞானம்.
7. சத் நோக்குடன் ஒட்டி நிற்பது பதி ஞானம்.
8. சுட்டிப்பான கிரகிப்பு நோக்கை முடிந்த சத்திய நோக்குடன் ஒட்டிச்சாதிக்கிற முறையில் தான் உருப்பற்றுகிறது.

## நோக்குகள்: பிம்பங்கள் பிரதிபிம்பங்கள்



## தளங்கள்: பொருளும் சாயையும்

மேலேயுள்ளது பொருளாயிருக்கக் கீழேயுள்ளது அதன் சாயையாயிருக்கும்.

1. சத்திய சம்பந்தமானவை
   அ. முடிந்த சத்தியம் ←→ மோட்சம் ←→ அர்த்தம் ←→ தர்மம்

2. ஞானம் சம்பந்தமானவை
   முடிந்த ஞானம் ←→ ஞானம் ←→ காமம்

3. அநந்தம் சம்பந்தமானவை
   அகண்டாகாரம் ←→ அமிர்தம்

4. பிரமம் சம்பந்தமானவை
   மூல சித்தாந்தம் ←→ சித்தாந்தம்

## அகங்கார விருத்தி

அகங்கார விருத்திகள் எட்டு. அவை வருமாறு:

1. பிரேமை
2. ஆசாரம்
3. அருள் நோக்கு
4. ஆரியத்துவம்
5. சத்தியம்
6. ஞானம்
7, அநந்தம்
8. பிரமம்

பிரேமையின் பிம்பம் பிரமம்.
ஆசாரத்தின் பிம்பம் அநந்தம்.
அருள் நோக்கின் பிம்பம் ஞானம்.
ஆரியத்துவத்தின் பிம்பம் சத்தியம்.

1. புத்திவிருத்தியில் கேவலக்கிடை முதல் பொது விவேகம் ஈறான பூமிகள் எல்லோருக்கும் வெளித்திருப்பது போல், அகங்கார விருத்தியில் பிரேமை எல்லோருக்கும் உண்டு.

2. உலகம் வெறும் சடமன்று; தெய்வம் இருக்கிற இடம் என்பதைப் பேணுகிற இடத்திலே தான் ஆசாரம் இருக்கும்.

3. அருள் நோக்குள்ளவனுக்குத்தான் அடிமை குடிமை முறை தெரியும். அருள் நோக்குள்ளவன் அடிமையைப் பிள்ளையாய்ப் பாவிப்பான். அடிமையும் அன்புடன் தொண்டு செய்வான். அருள் நோக்குத் தெரிந்தவன் தான் தமிழ் தெரிந்தவன்

4. ஆரியத்துவம்[17] அடைந்தவன் மகாசுத்தன். உலகைத்தீண்டுவதற்கு இறங்கமாட்டான்.

அகங்காரவிருத்திகள் எட்டாலும் புத்திவிருத்தியிலுள்ள பூமிகளைப் பார்க்க லாம். பிரேமை அல்லது ஆசாரத்தால் ஒரு பூமியைப் பார்க்கும் பொழுது அது ஒரு விருத்தியாய் சில அநுபவங்களிருக்கும். ஆனால் அருள் நோக்கு அல்லது ஆரியத்துவ முகமாய்ப் பார்க்கும் பொழுது அது ஒரு வாக்கோடு சேர்ந்த விருத்தியாயிருக்கும். அருள் நோக்கோடு சேர்ந்த வாக்குத்தான் தமிழ். அருள் நோக்குத் தெரியாதவர் களுக்குத் தமிழ் தெரியாது. ஆரியத்துவ நோக்கோடு சேர்ந்த வாக்குத்தான் ஆரியம். வாக்கு இருவகை: ஆரியம், தமிழ். அதனால் பாஷை இரண்டுதான்: ஆரியமும் தமிழும். ஏனையவை இவற்றிலிருந்து பிறழ்ந்த பாஷைகள். பிறழ்ந்த பாஷை களுக்கு எல்லையில்லை: ஆரியம், தமிழ் சுத்தமான பாஷைகள்.

## எண் குணங்கள்

பிரேமை இருக்கிற முறையில் சுதந்திரம், சர்வ வல்லமை இரண்டையும் நோக் குகிறதிருக்கும். இவ்விரு குணங்களும் பிரேமையின் ரீதியானவை. ஆனால் பிரேமை யின் பிம்பமான பிரமத்துவத்தை யடைந்து பிரமமாய் இருக்கிற பொழுது தான் உண்மையான சுதந்திரம், சர்வவல்லபம் இரண்டையும் அடையலாம்.
அநாதிபோதம், சர்வஞ்ஞத்துவம் இரண்டும் ஆசாரத்தின் ரீதியான குணங்கள். ஆசா ரம் அடைந்த இடத்தில் அவ்விரு குணங்களையும் நோக்குகிறதிருக்கும். ஆசாரத்தின் பிம்பமான அநந்தத்தையடையும் பொழுது தான் அவ்விரு குணங்களையும் உண் மையில் அடைய முடியும். திருப்தி, பேரருள், இரண்டும் அருள் நோக்கின் ரீதியான குணங்கள். அருள் நோக்கை அடையும் பொழுது அவற்றை நோக்குகிறதிருக்கும். ஆனால் ஞானத்தையடையும் பொழுது தான் அவ்விரு குணங்களையும் அடையலாம். விசுத்த தேகம், நிராமயான்மா ஆகிய இரு குணங்களும் ஆரியத்துவத்தின் ரீதியா னவை. அவற்றை உண்மையாய் அடைகிறது சத்தியத்தையடைந்தவர்கள்தான்.

## மனோ விருத்தி

மனோ விருத்தி நெற்றிக்கண் எனவும் சொல்லப்படும். தவம் என்றும் சொல் லப்படும். அது மறைந்திருக்கிறது. வெளிக்கவேணும். மனோ விருத்தியை இருபத் தைந்தாகச் சொல்லலாம். நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை என்பன பஞ்சகலைகள். நிவிர்த்தி கலை, நிவிர்த்தியில் நிவிர்த்தி, நிவிர்த்திப் பிர திட்டை, நிவிர்த்திவித்தை, நிவிர்த்திச்சாந்தி, நிவிர்த்திச் சாந்தியதீதை என ஐந்தாகும். பிரதிட்டாகலை, பிரதிட்டாநிவிர்த்தி, பிரதிட்டைப் பிரதிட்டை, பிரதிட்டைச் சாந்தி, பிரதிட்டைச் சாந்தியதீதை என ஐந்தாகும். இவ்வாறே மற்றவையும் ஐவைந்தாகும். ஆகவே 5x5 இருபத்தைந்து.

1. நோக்கைச் சீர்ப்படுத்தி நல்லமுறையில் திருப்புதல் நிவிர்த்தியில் நிவிர்த்தியாகிய தவத்தின் ஆரம்பம் எனலாம். தீக்ஷை, உபதேசம் இரண்டையும் அமைத்து உபாய மார்க்கமாய்ச் சாதித்தலும் தவத்தின் ஆரம்பமாகிய நிவிர்த்தியில் நிவிர்த்தியே.

2. புத்திவிருத்தியிலுள்ள பூமிகளைப் பிரேமையாதியால் கீழ் நோக்கிச் சாதித்தல் நிவிர்த்திப் பிரதிட்டையாகிய தவம்.

3. பிரேமையாதியால் மேல்நோக்கிச் சாதித்தல் பிரதிட்டைச் சாந்தியதீதை எனப் படும்.

4. காமாதி அறுபகை நீங்கச்சாதித்தல், தர்மார்த்தகாம மோட்சங்களைச் சாதித்தல் வித்தையில் வித்தை எனப்படும்.

5. புத்திவிருத்தியில் தளம் ஏறுவது சாந்தியதீதைப் பிரதிட்டை ஆகும்.

## சதா சிவ மூர்த்தி

சதா சிவ மூர்த்திக்கு ஐந்து திருமுகங்களும் முகத்துக்கு மூன்றாய் பதினைந்து திருக்கண்களும் உள.

I முதலாவது முகத்திலுள்ள கண்கள் அகங்காரம், புத்தி, மனம் என்பன.

1. அகங்காரம்: இது வலக்கண். மானம் (values) தெரிகிற கண். மானம் தெரிகிறது அகங்கார விருத்தியின் பாகம்.

2. புத்தி: இது இடக்கண். இரசக்கண் அல்லது சுவைக்கண். சுவை தெரிகிறது புத்தி விருத்தியின் பாகம்.

அகங்கார, புத்திவிருத்திகள். அதாவது வல, இடக் கண்கள் எல்லோருக்கும் உண்டு; வெளித்திருக்கின்றன. அகங்கார விருத்தியில் பிரேமை எல்லோருக்கும் வெளித்திருக்கிறது. புத்திவிருத்தியில் கேவலக்கிடை முதல் பொதுவிவேகம் வரை உள்ள பூமிகள் எல்லோருக்கும் வெளித்திருக்கின்றன.

3. மனோவிருத்தி நெற்றிக்கண். அது மறைந்திருக்கிறது. திறக்கப்பட வேண்டும். அது மறையும், வெளிக்கும். மனோவிருத்திதான் தவம் எனப்படுவது. அது வெளித்து நடக்க வேணும்.

அகங்கார புத்திவிருத்திகள் வெளித்திருக்கின்றன. மேலே ஏறலாம். ஏறினது இறங்கவும் கூடும். மனோவிருத்தி வெளிக்கும், மறையும்.

II சதாசிவ மூர்த்தியின் இரண்டாவது முகம் முதலாவது முகத்திற்கு உள்ளீடானது. இரண்டாவது முகத்திலுள்ள கண்கள் முதலாவது முகத்திலுள்ள கண்களுக்கு உள்ளீடானவை. இரண்டாவது முகத்திலுள்ள கண்கள் சித்தவிருத்தி, உள்ள விருத்தி, மனோலயம் என்பன.

4. சித்தவிருத்தி: சித்தம் அகங்காரத்துக்கு உட்கண்ணாயுள்ளது. அதாவது, வலக்கண்ணின் உட்கண். சித்தவிருத்தியாகிய உட்கண் திறந்தால் பார்வை வித்தியாசப்படும். அவர்கள் உலகத்தை வேறு கண்ணாற் பார்ப்பர். அவர்களுடைய மதிப்பு - கணிப்பு (values) வித்தியாசமாயிருக்கும்.

5. உள்ளவிருத்தி: புத்திவிருத்தியின் - இடக்கண்ணின் - சுவைக்கண்ணின் உட்கண்ணாய் உள்ளது. இந்தக்கண் திறந்தால் சுவை வேறுவிதமாயிருக்கும். உள்ளக்கண் திறந்தால்தான் நேரே சந்தேகமில்லாமல் பார்க்க முடியும். அவர்கள் தான் பணிசெய்யத் தெரிந்தவர்கள். நேரில் கண்டு கேட்டுச் செய்வதுதான் பணி. கற்பனையால், ஊகத்தால் செய்வது பணியாகாது. நாயன்மார் எல்லோரும் உள்ளவிருத்தி வெளித்தவர்கள்.

6. மனோலயம்: நெற்றிக்கண்ணின் - மனக்கண்ணின் - உட்கண்ணாய் உள்ளது. மனோலயம் துவக்கம் கதிதான்.

III மூன்றாவது முகம் இரண்டாவது முகத்துக்கு உள்ளீடானது. அதிலுள்ள சித்தலயம், உள்ளலயம், மனத்தெளிவு ஆகிய கண்கள் இரண்டாவது முகத்திலுள்ள கண்களின் உட்கண்கள்.

7. சித்தலயம்: சித்தவிருத்தியின் உட்கண், அதாவது, அகங்காரவிருத்தியின் உட்கண்ணின் உட்கண்ணாயுள்ளது.

8. உள்ளலயம் அல்லது சிவஞானபோதம், உள்ளவிருத்தியின் உட்கண். அதாவது புத்தி விருத்தியின் உட்கண்ணின் உட்கண்.

9. மனத்தெளிவு: மனோலயத்தின் உட்கண். மனோவிருத்தியின் உட்கண்ணின் உட்கண்.

IV நான்காவது திருமுகம் மூன்றாவது திருமுகத்துக்கு உள்ளீடானது. அதிலுள்ள சித்தத் தெளிவு, உள்ளத்தெளிவு, மன அழிவு ஆகிய கண்கள் மூன்றாவது திருமுகத்திலுள்ள திருக்கண்களுக்கு உள்ளீடானவை.

10. சித்தத் தெளிவு சித்தலயத்தின் உட்கண்.

11. உள்ளத்தெளிவு உள்ளலயத்தின் உட்கண்.

12. மன அழிவு மனத்தெளிவின் உட்கண்.

V ஐந்தாவது திருமுகம் நான்காவது திருமுகத்துக்கு உள்ளீடானது. அதிலுள்ள சித்த அழிவு, உள்ள அழிவு, மனமுளை ஆகிய திருக்கண்கள் நான்காவது திருமுகக் கண்களுக்கு உள்ளீடானவை.

13. சித்த அழிவு சித்தத் தெளிவின் உட்கண்.

14. உள்ள அழிவு உள்ளத் தெளிவின் உட்கண்.

15. மன முளை மன அழிவின் உள்ளீடான கண். மனம் அழிகிறது தான். அது தான் நிற்கிறது. அதில் ஒரு முளை முளைக்க வேணும். அதுதான் நிலைக்கிறது. அதுதான் கடைசி.

அகங்கார புத்திவிருத்திகள் வெளித்திருக்கின்றன. மேலே ஏறும்; சாபத்தால் கீழேயும் இறங்கலாம்.

மனோ, சித்த, உள்ள விருத்திகள் மறைந்து வெளிக்கும். கிரமம் மாறியும் மறைவு, வெளிப்பு இருக்கலாம். மனோவிருத்தி பிறந்துதான் சித்தவிருத்தி பிறக்க வேணுமென்றில்லை. கிரமம் மாறியும் வெளிப்பு வரலாம்.

மனோலயமும் அதற்கு மேலுள்ள கண்களும் வெளித்தால் வெளித்ததுதான். பின் மறைவதில்லை. அதனாலேயே அவை கதி எனப்படும்.

1. சமீபகால சரித்திர புருஷர்களுள்ளே மகாத்மா காந்தியும், ஆறுமுகநாவலரும் கொஞ்சம் மனோவிருத்தி வெளித்திருந்தவர்கள். அதுதான் அவர்களுக்குரிய பெருமைக்குக் காரணம். கைலாசபதி அவர்களுக்கு 1934 இல் மனோவிருத்தி வெளித்தது.

2. இரத்தினசபாபதி உபாத்தியாருக்கு சித்த விருத்தி வெளித்திருந்தது. அதுதான் அவருடைய பெருமை. அகங்கார விருத்தி போல சித்தவிருத்தியிலும் பிரேமை யாதி எட்டு விருத்திகளுண்டு. கைலாசபதி அவர்களுக்கு 1954 இல் சித்த விருத்தி வெளித்தது.

3. உள்ள விருத்தி வெளித்தவர்கள் நாயன்மார் – பணிசெய்யத் தெரிந்தவர்கள் .அரிச் சந்திரனாயிருந்த பொழுது உள்ளக்கண் திறந்திருந்தபடியால் மனைவி மக்களை விற்பதே பணி என்றறிந்து விற்றான். அரிச்சந்திரன் தானே சிறுத் தொண்டராய்ப் பிறந்திருந்த பொழுது உள்ளலயம் – சிவஞானபோதம் வெளித்திருந்தது. அப் பொழுது பிள்ளையை அரிந்து கறிசமைத்துக் கொடுத்தார். கேட்பவர் யார் என் பதை நேரில் கண்டு உரியவர்க்கே கொடுத்தார். அரிச்சந்திரன், சந்திரமதி, தேவ தாசன், சத்தியகீர்த்தி நால்வரும் அப்படியே குடும்பமாய் சிறுத்தொண்டராயும், மனைவியாயும், பிள்ளையாயும், பணிப்பெண்ணாயும் வந்திருந்தார்கள். புத்தி விருத்தி போல் உள்ளவிருத்தியிலும் கேவலக்கிடை முதலிய தளங்களுண்டு.

4. மனோலயம் நீர் போல உருகிப் போகிறது. எலும்பெல்லாம் உருகக்கூடியதாய் பொருளைப்பார்க்கிறது.

‘ சும்மாயிரு சொல்லற என்றலுமே
அம்மா பொருளொன்று மறிந்திலனே ’

என்றது மனோலயத்தை அடைந்த நிலை.

5. சித்தலயம் பிறந்தவர் திருவள்ளுவர்.
கிருஷ்ணர் மனோலயம், சித்தலயம் இரண்டையும் அடைந்தவர்.

6. உள்ளலயம்-சீவபோத லயம் அடைந்தவர் மாணிக்கவாசகசுவாமிகள்.

7. மனத்தெளிவு அடைந்தவர்கள் திருஞானசம்பந்தரும் அகஸ்தியரும்.

மனத்தெளிவுக்கு மேலே இலக்கியம் சொல்ல முடியாது.
சித்தம் தெளிந்தவருக்கு இலக்கியம் காட்ட முடியாது.

‘ வித்தகமாகிய வேடத்த ருண்டவூண்
அத்தன் அயன் மால் அருந்திய வண்ணமாம்
சித்தம் தெளிந்தவர்சேடம்புசித்திட
முத்தியாம் என்ற நம்மூலன் மொழிந்ததே ’

— திருமந்திரம் ( 1866 )

‘‘ போதோ விசும்போ, புனலோ பணிகளது பதியோ ’’ என்பதில் போது: சிவஞான போதம், உள்ளலயம்.

விசும்பு: சித்தலயம்

புனல்: மனோலயம், நீர் போல உருகிப்போகிறது.

பணிகளது பதி: உள்ள விருத்தி-நேரே காணுகிறது.

புத்திவிருத்தியில் காமம், ஞானம், முடிந்தஞாநம் என்று மூன்று நிலைகளில் ஞானம் இருக்கிறது. அகங்கார விருத்தியிலும் ஞாநம் இருக்கிறது. ஞானம் அடைந்தவர் என்று உலகவழக்கில் பொதுவாகச் சொல்வது அகங்கார விருத்தி ஞானம் அடைந்தவரைத்தான். கச்சியப்பர், அருணகிரிநாதர் இருவரும் அகங்கார விருத்தியில் ஞானம் அடைந்தவர்கள். கைலாசபதி அவர்களுக்கு 1934 இல் அகங்கார விருத்தியில் சத்தியமும் 1953 இல் ஞானமும் விருத்திப்பட்டன. (ஞாநம்வடசொல், ஞானம்தமிழ்வடிவம்)

கிருஷ்ணர் சித்தவிருத்தியில் ஞானம் அடைந்தவர்.

அகஸ்தியர் சித்தலயத்தில் ஞானம் அடைந்தவர்.

சித்தத்தெளிவு, சித்த அழிவுகளில் ஞானம் அடைந்தவர்களைச் சொல்லமுடியாது.

## அகங்கார புத்திவிருத்திகளின் தொடர்பு

1. அகங்காரவிருத்திப் பிரேமையால் புத்திவிருத்தி ஒருதளத்திலிருந்து எட்டாவது தளத்தைப் பார்க்கலாம்.

2. அகங்காரவிருத்தி ஆசாரத்தால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து ஏழாவது தளத்தைப் பார்க்கலாம்.

3. அகங்காரவிருத்தி அருள் நோக்கால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து ஆறாவது தளத்தைப் பார்க்கலாம்.

4. அகங்காரவிருத்தி ஆரியத்துவத்தால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து ஐந்தாவது தளத்தைப் பார்க்கலாம்.

5. அகங்காரவிருத்தி சத்தியத்தால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து நாலாவது தளத்தைப் பார்க்கலாம்.

6. அகங்காரவிருத்தி ஞாநத்தால் புத்தி விருத்தியின் ஒருதளத்திலிருந்து மூன்றாவது தளத்தைப் பார்க்கலாம்.

7. அகங்காரவிருத்தி அநந்தத்தால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து இரண்டாவது தளத்தைப் பார்க்கலாம்.

8. அகங்காரவிருத்தி பிரமத்தால் புத்திவிருத்தியில் ஒருதளத்திலிருந்து அதே தளத்தைப்பார்க்கலாம்.

புத்திவிருத்தியில் ஒருதளத்தில் ஊன்றிக்கொண்டு அதன் நோக்கையும் சேர்ந்துக்கொண்டு மேலே எட்டிப்பார்க்கிற தளத்கிலேயுள்ள சில பல துறைகளைப்பார்க்கலாம். பார்க்கப்படுகிற தளம் சாதகனுடைய நோக்குக்கு எட்டினதாயுமிருக்கலாம். எட்டாததாயும் இருக்கலாம். எட்டாததாயிருந்தால அதைப்பற்றிய சில பல குறிப்புகள் விளங்கும். குறிப்பாகப் பார்க்கிறதென்றே சொல்லலாம். அதற்கு வாய்பாடு அங்கொன்று இங்கொன்று தெரியும்.
உதாரணம்:

1. முடிந்த சத்திய நோக்குத்தெரிந்து அதிலிருந்து பிரேமையாற் பார்க்கும் பொழுது சிவம் குறிப்பாகத் தெரியும்.

2. அமிர்த நோக்கும் ஆரியத்துவமும் தெரிந்து அமிர்தத்திலிருந்து ஆரியத்துவ முகமாய் ஐந்தாவது சத்தைப் பார்ப்பது தான் பிரமவித்தை

3. மோட்சநோக்கும் ஆசாரமுந் தெரிந்தவர் மோட்சத்திலிருந்து ஆசாரத்தால் ஏழாவது அகண்டாகாரத்தைப் பார்க்கலாம். அதுவே நாடி சுத்தி அல்லது நாடி கழுவுதல் எனப்படும்.

நாடி-நாட்டம். நாடிசுத்தி-நாட்டங்களைச் சீர்ப்படுத்துவது. இதுவும் ஒருவகைத் தவம்.

பிரேமையாதிகளால் ஒருதளத்திலிருந்து கீழ்நோக்கியும் பார்க்கலாம்; மேல்நோக்கியும் பார்க்கலாம். ஆனால் முதலாங்கட்டிலுள்ள தளங்களை மேல்நோக்கியாவது கீழ் நோக்கியாவது பிரேமையாதிகளாற் சாதிப்பதில்லை. அத்தளங்களிலிருந்து மேல்நோக்கி இரண்டாங் கட்டிலுள்ள தளங்களைச் சாதிக்கலாம். சத்தளம் தொடங்கி மேலேயுள்ள தளங்களிலிருந்து கீழ்நோக்கிப் பிரேமையாதிகளாற் சாதிப்பதும் இல்லை.

பிரதிட்டைச் சாந்தியதீதை: ஒருதளத்திலிருந்து மேல் நோக்கிப் பிரேமையாதியாற் சாதிப்பது தான் பிரதிட்டைச் சாந்தியதீதை எனப்படும் தவம். இது ஒரு பேறு அல்ல.

நிவிர்த்திப்பிரதிட்டை: ஒரு தளத்திலிருந்து பிரேமையாதியாற் கீழ் நோக்கிச் சாதிப்பது தான் நிவிர்த்திப்பிரதிட்டை எனப்படும் தவம். இது ஒரு பேறு.

பிரேமை, ஆசாரம், அருள்நோக்கு, ஆரியத்துவம் ஆகிய நான்கு முகமாயும் கீழ் நோக்கிச் சாதிப்பது ஒரு ஆக்கமான பேறு. சத்தியம், ஞானம், அநந்தம், பிரமம் ஆகிய நான்கு முகமாயும் கீழ் நோக்கிச் சாதிப்பது ஒரு அழிவான பேறு. இவனுடைய பிழைகள் தேய்ந்து தேய்ந்து இவன் பொருளாகிற படியால், இவன்தான் அழிந்து போகிறான். அழிவையடைந்து தூய்மையடைகிறதுதான் பேறாயிருக்கும்.

இதைப்பற்றி ஒரு சூத்திரம் செய்கிற காலத்தில்

'ஆக்கமும் அழிவும் அடைதலினோக்கிய'

என்பது சூத்திரத்தின் ஒரு பகுதியாய் வரும்.

பேறாகப் பார்க்கும் போது பிரேமையால் சாதிப்பது ஒரு முறைதான் அமையும். அதாவது முடிந்த சத்தியத்தில் நின்று பிரேமையால் எட்டாவது தர்மபூமியைச் சாதிக்கிறது மாத்திரமதான் பேறாய் அமையும்.

தர்மத்துக்கு விரியாத உருத்திரர் முடிந்த சத்தியத்தில் நின்று பிரேமையால் கீழே எட்டாவது தர்மத்தைச் சாதித்ததுதான் அவருடைய தர்மப் பிரேமை: அட்ட வீரட்டங்கள் – திரிபுர தகனம் முதலாயின. இவை அவருடைய தர்மங்கள்.

தர்மத்துக்கு இறங்கக்கூடிய விஷ்ணுவின் தர்மப் பிரேமை வேறு முறையாயிருக்கும். சுட்டிப்பான கிரகிப்புத் தளத்திலிருந்து பிரேமையால் மேலே எட்டாவது தர்மத்தைச் சாதிப்பதுதான் சாதாரண தர்மப் பிரேமை.

ஒருவன் நீதியீனமாய் வேறொருவனை அடிக்கும் பொழுது, பிழை செய்தவனைத் தண்டிக்கக் கொடுக்குக் கட்டுவது தர்மப் பிரேமை.

சித்தாந்தத்திலிருந்து கீழே ஏழாவது தர்மத்தை ஆசாரமுகமாகச் சாதிப்பதும், முடிந்த சத்தியத்திலிருந்து கீழே ஏழாவது அர்த்தத்தை ஆசாரமுகமாய்ச் சாதிப்பதும் ஆகிய இரண்டிலும்தான் ஆசாரம் பேறாய் வரும்.

அவ்வாறு அருள்முகமாய் பேறாகச் சாதிக்கிறது. மூன்றுமுறை வரும். அந்த மூன்றுந்தான் முத்தமிழைப் பேறாக அடைகிற இடங்கள்.

*ஆரியமுந் தமிழும்*

அருள் நோக்காலும் ஆரியத்துவத்தாலும் புத்திவிருத்திப் பூமிகளைப் பார்க்கும் பொழுது அமையும் விருத்திகள் வாக்குகளோடு சேர்ந்த விருத்திகளாயிருக்கும் அருள்நோக்கோடு சேர்ந்த வாக்கு தமிழ்.

ஆரியத்துவ நோக்கோடு சேர்ந்த வாக்கு ஆரியம்.

வாக்கு இருவகைதான்: ஆரியம், தமிழ்.

அதனால் பாஷை இரண்டுதான்: ஆரியமும் தமிழும்.

ஏனையவை இவற்றிலிருந்து பிறழ்ந்த பாஷைகள்.

பிறழ்ந்த பாஷைகளுக்கு எல்லையில்லை.

ஆரியம், தமிழ் சுத்தமான பாஷைகள்.

கண்ட பொருளுக்குத் தக்கபடிதான், வாக்கு வெளிப்படுத்துகிற முறைகள் எல்லாம் இருக்கும்.

பொருள் சுத்தமாயிருந்தால் வெளிப்படுத்துகிற வாக்கும் சுத்தமாயிருக்கும்; சுத்தமான இடத்தில் வேதாகம சம்பந்தமாய் - ஆரியம், தமிழ் சம்பந்தமாயிருக்கும்.

பிறழ்ச்சிகளுடன் கலந்திருக்கிற பொழுது உரு பிறழ்ந்ததாய், சொல் பிறழ்ந்ததாயிருக்கும். பொருளைச் சுத்தமாய்க் கிரகிக்கிற பொழுது வைதிகமான கலையாய்வரும்.

பொருளைப் பிழையாய்க் கிரகித்தால் பிறழ்வான கலையாய் வரும்.

கண்ட பொருளுக்குத் தக்கபடிதான் உரு, வடிவம் (form) ஆகியன அமையும்.

ஒருவகையான பொருள் அகவலில்தான் பாடலாம்.

இன்னொன்று வெண்பாவில்தான் பாடலாம்.

புராணத்துக்கு ஏற்ட விருத்தம்தான்.

பிரம சூத்திரம் 'எங்கிருந்து இதன் சிருட்டி முதலியன?' பிரமம் என்றால் என்ன? ஆகாயம் என்றால் என்ன? என்று மூலத்தை ஆராய்கிறது. அது – இயற்கை – வெறும் சடமாய் இருக்கிறதாய் வைதிகமுறையில் பார்க்க மாட்டார்கள்.

வாயுதான் வாயுபகவான். வரம் கொடுக்க ஒருஉருவம் எடுப்பர் (காட்சியாய்க் கண்டது).

தெய்வம் வேறு, இயற்கை வேறு என்று பார்ப்பது வைதிக முறையல்ல.

தெய்வம் இருந்தால் இருக்கட்டும் என்று பிரித்துவிட்டு, இயற்கையை ஆராய்கிறான் விஞ்ஞானி. அது எல்லாவற்றிற்கும் ஓம் ஒன்று நிற்கும், இவன் எந்த விதமாகப் பார்க்க விரும்புகிறானோ அந்த விதமாய் அது இருக்கும். விஞ்ஞானியின் ஆராய்ச்சிக்கு இது அடிப்படை; ஒழுக்கம், சமயம் என்பன வேறு.

வைதிகன் அமிர்தத்துக்கு (அழியாநிலைக்கு) உபகாரமோ, அமிர்தமோ என்றுதான் முதற் கேட்பான். அதற்கு உபகாரமில்லாவிட்டால் வீண்வேலை என்று விட்டுவிடுவான்.

விஞ்ஞானிகளின் முறை வைதிக முறையல்ல. ஒரு நோக்கை வைதிகமாய் விருத்தி (develop) செய்வது ஒரு கலை. அதை அவைதிகமாய் விருத்தி பண்ணினால் நூதனம் நூதனமாய் எத்தனையோ வரலாம். அந்த முடிபுகள் வைதிகமான கலைகளல்ல. அவை கலைகள் என்று வைதிகன் – வேதமரபு தெரிந்தவன் – ஒத்துக்கொள்ளான்.

புத்திவிருத்தியில் முதற்கட்டிலுள்ள பூமிகளை மேல்நோக்கியோ, கீழ்நோக்கியோ பிரேமையாதிகளாற் பார்ப்பதில்லை. எனவே பிரேமையாதியாற் பார்க்கக்கூடிய மிகக் கீழேயுள்ள பூமி தர்மம்தான். தர்மபூமியை அருள் நோக்கால் மேல் நோக்கி பார்ப்பதானால் பொதுவிவேக பூமியிலிருந்துதான் பாரக்கலாம்.

1. பொது விவேகத்திலிருந்து அருள்நோக்கால் மேலே ஆறாவது தர்மத்தைப் பார்ப்பது ஒருவகையான தமிழ், வாகடத்தமிழ், சோதிடத்தமிழ் முதலியன. கொச்சைப்பாஷை. இதற்கு இலக்கணம் வேறு.

2. நல்லார்வ தளத்திலிருந்து அருள் நோக்கோடு அர்த்த பூமித்துறைகளைப் பார்ப்பது புராணத்தமிழ். இதற்குப் பாஷை நடைவேறு. புராணத்தமிழ் அர்த்தத்தை – பொருளைச் – சொல்வது.

3. நாகரிக தளத்திலிருந்து காமத்தை அருள் நோக்காற் சொல்வது தான் சங்கத் தமிழ். பொருள் காமந்தான். காமதளத்தில் ஏழுதுறைகளுண்டு. ஏழு துறைகளோடும் சேர்ந்தவை ஏழுதிணைகள். வெளித்துறையிலிருந்து முறையே கைக்கிளை, பாலை, மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பெருந்திணை என்று வரும். (புத்திவிருத்திப் படம் பார்க்க) சங்கத்தமிழுக்கு இலக்கணம் தொல்காப்பியம்.

4. சம்ஸ்கார தளத்திலிருந்து மோட்ச தளத்துறைகளை அருள்நோக்கோடு சொல்வது மோட்சத்தமிழ்.

5. பண்பாட்டிலிருந்து அருள்நோக்கோடு அமிர்தத்துறைகளைச் சொல்வது அமிர்தத் தமிழ்.

6. தர்மத்திலிருந்து அருள்நோக்கோடு ஞானத்துறைகளைச் சொல்லுவது ஞானத் தமிழ்.

இவ்வாறே இறுதிவரை பார்க்கலாம். ஆகமேலே அகண்டாகாரத்திலிருந்து அருள் நோக்கால் சிவத்தைப் பார்க்கலாம். திருவள்ளுவர், திருமூலர் போன்றவர்கள் அகண்டாகார நோக்குத் தெரிந்தவர்கள். அதனால் அவர்கள் பூரணமாய்த் தமிழைத் தெரியக்கூடியவர்கள்.

ஆரியத்துவத்தால் ஐந்தாமிடத்தைத் தான் பார்க்கலாம்.

1. நல்லார்வ தளத்திலிருந்து ஆரியத்துவ முகமாய் மேலே ஐந்தாவது தர்மத்தைப் பார்ப்பதுதான் பிராகிருதம்.

2. நாகரிக தளத்திலிருந்து மேலே ஐந்தாவது அர்த்தத்தை ஆரியத்துவ முகமாய்ப் பார்ப்பது தான் சம்ஸ்கிருதம்.

சத் முதல் மேலேயுள்ள பூமிகளிலிருந்து கீழ்நோக்கிப் பிரேமையாதிகளாற் சாதிப்பதில்லை. முடிந்த சத்தியம் முதல் தர்மம் வரையுள்ள பூமிகளிலிருந்து கீழ் நோக்கிச் சாதிப்பதுதான் பேறு ( நிவிர்த்திப் பிரதிட்டை ) எனப்படும்.

உலக வழக்கில் ஒரு பேறாகச் சொல்லும் பொழுது வாகடத்தமிழ், புராணத் தமிழ், சங்கத்தமிழ், மூன்றுந்தான் வழங்கும். ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான நடை, பாஷை, இலக்கணம் உண்டு.

ஞானபூமியின் நோக்குத் தெரிந்தோர் அதில் வைத்து தர்மத்தை அருள் நோக்கோடு கீழ் நோக்கிச் சாதிக்கும் பொழுதுதான் வாகடத்தமிழ் பேறாய் வரும்.

சித்தாந்த நோக்கிலிருந்து கீழ் நோக்கி, அருள் நோக்கால் அர்த்ததைச் சாதிக்கும் பொழுது புராணத்தமிழ் பேறாய் வரும்.

முடிந்த சத்தியத்திலிருந்து அருள் நோக்காற் கீழ்நோக்கிக் காமத்தைச் சாதிக்கும் பொழுது சங்கத்தமிழ் பேறாய் வரும்.

சத் முதலான இடங்களிலிருந்து கீழ் நோக்கிச் சாதிப்பதில்லை. அதனால் அப்பால் தமிழ் என்று பேறாகச் சொல்வதற்கில்லை. தமிழாக மோட்சத்தைக் கீழ் நோக்கிப் பார்க்க முடியாது.

ஆனால் ஆரியத்துவ முகமாய் முடிந்த சத்தியத்திலிருந்து கீழ் நோக்கி ஐந்தாவது மோட்சத்தைப் பார்க்கலாம்.

ஆகவே, மோட்சத்தைப் பயக்கிற மோட்சத்தமிழ் மேல் நோக்கிப் பார்க்க இருக்கிறது. இது கசியப்பண்ணும். உருகப்பண்ணும். ஆனால் அறுக்கிறதுக்கு ஆரியந்தான். மந்திரந்தான் பேறாய் அமையவேணும். அதனால் தான் மந்திரம் ஆரியத்திலிருக்கிறது.

தமிழாய் மூன்று நிலையாய்த்தான் பேறாய் இருக்கிறது.
ஆரியமாய் நாலு வகை பேறாய் வரும்.

அமிர்தம்; ஞானம், சித்தாந்தம் முடிந்த சத்தியம் ஆகிய நாலு பூமிகளிலிருந்தும் முறையே தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் ஆகிய நாலு பூமிகளையும் கீழ்நோக்கி ஆரியத்துவ முகமாய்ச் சாதிப்பது தான் ஆரியத்துவத்தைப் பேறாகச் சாதிக்கிற நாலு முறையும். மேல் நோக்கிச் சிவம் ஈறாய் ஆரிய முகமாயும், தமிழ் முகமாயும் பார்க்கலாம்.

## குறிப்புக்கள்

1. 'மந்திரதிருஷ்டா' என்ற தொடரிற் போல ( √ த்ருஸ் → பஸ்ய் = பார் ).

2. இக் கால வழக்கில் 5 ம் ஆண்டு. ( ஆரம்ப பாடசாலையில் 4 ஆண்டுகள் கற்ற பின்னரே ஆங்கிலப் பாடசாலையில் முதலாம் வருடத்தில் சேரலாம். )

3. அக்கால லண்டன் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை.

4. ( ஆன்மீக ) சாதனை √ஸத், √ஸித் = நேரேகுறியை நோக்கிச் செல். ஸாதக என்ற வடசொல் தமிழில் சாதகன், சாதகி என எழுதப்படும். பார்க்க: திருமந்திரம் செய்யுள் 1041, 1043, 1044, ( திருப்பனந்தாள் பதிப்பு, 1958 )

5. திருக்குறள், 711

6. இந்தக் குறிப்பு பண்டிதமணியவர்கள் கைலாசபதியவர்களிடம் கேட்டு எழுதிய குறிப்பேடு, இலக்கம் 12, பக்கம் 71 ல் 22-3-53 திகதியின் கீழ்க் காணப்படுகிறது.

7. ஸ்மிருதி என்னும் சொல் எழுதப்பட்ட மனுதர்ம சாஸ்திரம் முதலியவற்றை இங்கு குறிக்கவில்லை. மூலப்பொருளில், தூய உள்ளத்தினால் சிந்திக்கப்பட்டது என்ற கருத்தில் வழங்கப்பட்டுள்ளது. சுருதியைக் காண்போர் கலியுகத்தில் இங்கு வாரார் எனினும் ஸ்மிருதியைக் காண்போர் இருக்க முடியும் போலும்.

8. மேலே 4 ம் குறிப்பைப் பார்க்க.

9. கந்தபுராணம்: காசிபன் உபதேசப் படலம், செய்யுள் 12 ( நாவலர் 7 ம் பதிப்பு 1955)

10. பிரமசூத்திரம் 1-3-36 ( அத்வைத ஆசிரம ஆங்கிலப் பதிப்பு; செந்திநாதையர் பதிப்பு: நீலகண்ட பாடிய மொழிபெயர்ப்பு (1907) பக்கம்: 299)

11. மனுதர்ம சாஸ்திரம் அத்தியாயம் 2, சுலோ 26 முதல் ......
சைவநூல்கள் 16 ஐ வற்புறுத்தும்: சைவபூஷணம் (தேவகோட்டை. 1932) சுலோகம் 269
அகோரசிவாசாரியார்: சைவசோடசப்பிரகாசிகை ( கிரியாகிரம த்யோதிகை- 3ஆம் பாகம்)

12. திருமுருகாற்றுப்படை — 3. 12 (நாவலர் பதிப்பு 1947, பக். 29)

13. திருக்குறள், 29

14. இங்கு இது விசேட கருத்தில் உபயோகப்படுகிறது. யாழ்ப்பாணப் பேச்சுவழக்கிலோ, இன்றைய சமூக அமைப்பிலும் நவீன சமூக விஞ்ஞானிகள் உபயோகிக்கும் வர்ணம், ஜாதி, என்ற சொற்களிலும் வழங்கும் கருத்திலோ அன்று.

14-1 அரதத்தர்: சுருதிசூக்திமாலை, ஹரிஹரதாரதம்மியம், தசசுலோகி. பஞ்சரத்தினமாலிகை ஆகியவற்றை ஆக்கியோர் - எஸ். சுவாமிநாதனின் கட்டுரை "Saiva Siddhanta." Vol. XV No. 1 (1980)

15. "சத்யம் ஞானமநந்தம் ப்ரஹ்ம" என்ற தொடர் தைத்திரீய உபநிடதம் பிரஹ்மானந்தவல்லி, முதல் அநுவாகத்தில் உளது. உரையாசிரியர் எவரும் இதன் சிறப்பை விளக்கினார் அல்லர். பார்க்க:

செந்திநாதையர் 1) நீலகண்ட பாடியம் பக். 158
2) மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம்: பக். 91

Sri Aurobindo, Eight Upanishads (1953) P. 190-1
Taitriyopanisad - Swami Sarvananda (Madras, 1958) P.77,80-81)

16. சிவஞானசித்தியார்; சூத் 8. அதி. 4 செய்யுள், 39.

17. 19 ஆம் நூற்றாண்டு மாக்ஸ்முல்லர், கால்டுவெல் கோஷ்டியினர் கருத்தை இங்கு கொள்ளக்கூடாது. பார்க்க: "Perennial Hindu Culture and the Twin Myths" - M. Vaitialingam, Jaffna (1980). இந்நூலாசிரியர் தாம் ஞானி கைலாசபதியின் கூற்றாலே இவ்விரு கட்டுக்கதைகளின் மூலத்தை ஆராய்ந்ததாக அந்நூற்றொடக்கத்தில் கூறுகிறார்.

## ச. பரநிருபசிங்கம் (14.2.1925 — )

ஆசிரியர் திரு ச. பரநிருபசிங்கத்துக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு (15) பதினைந்து வருடத்துக்கு மேல் இருந்து வருகின்றது. தமிழ் இலக்கண இலக்கியங்களில் என்னிடம் சந்தேகந் தெளிவதுண்டு. பரநிருபசிங்கத்தின் தமிழறிவு தமிழ்ப் பண்டிதர்களின் அறிவுக்கு எத்துணையும் குறைந்ததன்று. நுண்ணறிவு, தருக்கரீதியான விவேகம் இவருடைய தனிச் சிறப்புக்கள்.

சமயத்துறையில் நானும் பரநிருபசிங்கமும் ஒருவருக்கொருவர் ஆசிரியராயிருந்து வருகிறோம். சமயதத்துவங்களில் நான் முகந்தவை அத்தியற்பம்; பரநிருபசிங்கம் அறிந்தவை மிக அதிகம்; நுண்ணியவை இருவருக்கும் சமய தத்துவஞானி ஒருவரின் நீண்டகாலச் சார்பு கிடைத்ததுண்டு. பரநிருபசிங்கம் அந்ம் மகானிடம் முகந்து கொண்டவைகள் நான் முகந்தவைகளிலும் மிக மிக அதிகம். சமயத்துறையிற் சந்தேகம் தெளிவதற்குப் பரநிருபசிங்கம் இந்த இலங்கையில் ஒரே ஒருவராய் விளங்குகின்றார்.

சமய, சித்தாந்த அறிவு பரநிருபசிங்கத்தின்பால் நிறைய உண்டு. அதிலும் பார்க்க, பரநிருபசிங்கத்தின் ஆழ்ந்த சிந்தனைக்கே நான் மதிப்புக் கொடுக்கிறேன். சிந்தனைகளைத் தெளிவு பெறச் சொல்லுதல், எழுதுதல்களிலும் ஆற்றல் படைத்தவர் பரநிருபசிங்கம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
14-12-1968